விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 19 வியாழக்கிழமை (06.10.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 291

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## கொழும்பைச் சுற்றினார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுக் கொழும்பின் பல்வேறுபட்ட பிரதேசங்களுக்கு விஜயம் செய்தார். இதன் போது நாடாளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பாது காப்பு அமைச்சின் கண்காணிப்பு நாடாளு மன்ற உறுப்பினர் ஆர்.துமிந்த சில்வா, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கொழும்பு மாநகர சபையின் தலைமை வேட்பாளர் மிலிந்த மொறகொட ஆகியோர் உடன் இருந் தனர்.

இவர்கள் வடகொழும்பு-அப்பல்வத்த, கிம் புலாகல, வெள்ளவத்தை மயூரபதி ஆலயம் என்பவற்றுக்கும் விஜயம் செய்துள்ளனர்.

இதனிடையே பாதுகாப்பு அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை இணைந்து கொழும்பு நகரில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி (19ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரத்து 800 பேரில் 755 பேரே விடுதலை

(கொழும்பு)

அரசாங்கத்தால் கடந்த மாதம் 30ஆம் திகதி விடுதலை செய்யப்படுவதாக அறிவிக் கப்பட்டிருந்த ஆயிரத்து 800 போராளிகளில் 755 பேர் கடந்த 03ஆம் திகதி விடுதலை செய் யப்பட்டுள்ளனர்.

வவுனியா மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள புனர்வாழ்வு முகாம்களில் பயிற்சி பெற்ற 755 விடுதலைப் புலிகளின் போராளி களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போராளிகள் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவுப் பாட சாலையில் இயங்கி வந்த புனர்வாழ்வு நிலை யத்தில் வைத்துப் படைத்தரப்பினரால் அவர் களின் (20ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவில் சிகிச்சை பெற ஜனாதிபதிக்கு அனுமதி மறுப்பு

## பிளேக்கிடம் விளக்கம் கேட்டார் பீரிஸ்

(நியூயோர்க்)

**ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ டெக்சாஸ் மாநிலத்தில் அமைந் துள்ள ஹொஸ்டன் மருத்துவமனையில் சிகிச்சைப் பெறுவதற்கு அமெரிக்க அதிகாரிகள் அனுமதி வழங்கவில்லை எனத் தெரிய வந்துள்ளது.**

இது குறித்து அமெரிக்காவின் பிரதிராஜாங்க அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக்கிடம் வெளி விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் முறையிட் டுள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் பதிலளித்த றொபேர்ட் ஓ பிளேக் ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷவுக்கு நியூயோர்க்கில் மட்டுமே ராஜதந் திர பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக குறிப் பிட்டுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியூயோர்க்குக்கு வெளியே செல்லும் போது ஏற்படக் கூடிய (20ஆம் பக்கம் பார்க்க)

## அழைப்பாணையை ஏற்க அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அமெரிக்க நீதிமன்றத்தினால் அனுப்பப்பட்ட அழைப் பாணையை ஏற்றுக்கொள்ள முடியாதென அரசாங்கம் நிராகரித்துள்ளது.

ஒருநாட்டின் அரசாங்கத்தின் தலைவர் களுக்கு பொருந்தும் ஹேக் சேவை என்ற சர்வதேச இணக்கப்பாடு ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவுக்கும் பொருந்தும் என்பதா லேயே அந்த அழைப்பாணையை நிராகரிப் பதாக அரசாங்கம் அமெரிக்காவுக்கு அறி வித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி யான கேணல் ரமேஷின் துணைவி வத்சலா தேவி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது சுமத்தி யுள்ள குற்றச்சாட்டுக்கள் இலங்கைக்கு உட் பட்டது என்ற வகையில், ஜனாதிபதிக்கு எதிராக அமெரிக்காவில் வழக்குகளைத்தாக்கல் செய்ய முடியாது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்நிலைப்பாடு தொடர்பில் நீதி அமைச்சினால் அமெரிக்க அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றம் அழைப்பாணை அனுப் பியிருந்தமையானது இலங்கையின் இறை யாண்மையை மீறும் செயல் எனவும் அரசாங் கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## நிதி திரட்டும் நடவடிக்கையில் புலிகளின் சர்வதேச வலையமைப்பு

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் நிறைவடைவதற்கு முன்னராகவே நிதி திரட்டல் நடவடிக்கைகள் முடங்கியிருந்த தமிழீழ விடுதலைப் புலி களின் சர்வதேச வலையமைப்பு மீண்டும் நிதி திரட்டல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள தாக இலங்கையின் புலனாய்வு மற்றும் வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மனிதவுரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராகச் சர்வதேச நாடுகள் அழுத்தங்களைப் பிர யோகித்து வரும் நிலையில் புலிகள் இந்த நிதி திரட்டல் முனைப்புகளில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆகியவற்றில் இலங் கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தச் சில தரப் பினர் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இதேவேளை நிதி திரட்டுவது தொடர்பில் விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு இடை யில் முரண்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது. (எ-5)

## நெருக்கடி குறித்து ஜே.வி.பி. ஆராய்வு

(கொழும்பு)

புதிய அரசியற் கட்சியொன்றை ஸ்தாபிப் பது குறித்து இதுவரை தீர்மானம் ஒன்றை மேற்கொள்ளவில்லை என ஜே.வி.பியிலி ருந்து விலகிய மாற்றுக்கொள்கைக் குழு தெரி வித்துள்ளது. அக்குழுவின் உறுப்பினரான மேல்மாகாண சபை உறுப்பினர் தீப்தி ராஜ பக்ஷ இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

மாற்றுக்கொள்கைக் குழு புதிய கட்சி யொன்றை ஸ்தாபிக்கப் போவதாகப் பிற ஊடகங்களில் வெளியான செய்தி தொடர் பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இத னைக் கூறினார்.

முழுமையான பல்சமூக இடதுசாரிக் கட்சி யொன்றை ஸ்தாபிப்பதே தமக்கு அவசி யமாகவிருப்பதாக அவர் குறிப்பிட்டார். இதன் பொருட்டு நாடளாவிய ரீதியாக விசேட கருத் தரங்குகளை மேற்கொண்டு வருவதாக மாற் றுக்கொள்கைக் குழு உறுப்பினர் தெரிவித்தார்.

இதேவேளை ஜே.வி.பியினரால் கொழும் பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கட்சியின் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் மாற்றுக்கொள் கைக்குழுவினர்கலந்துகொள்ளப்போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முஸ்லிம் மக்களும் ஏற்க வேண்டும்!

### உறுதிப்படுத்துவேன் என்கிறார் சம்பந்தன்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு காணப்படவுள்ள அரசியல் தீர்வானது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதைப் போன்று முஸ்லிம் மக்களாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமைவதை உறுதி செய்வதை எமது முயற்சியாக இருக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவிருக் கும் உள்ளூராட்சி தேர்தல் குறித்து வெளியிட் டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது, யுத்தம் மற்றும் பேரழி விற்குப் பின்னர் தேசியப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்ற தேவை பொருத்தமான இடங்களில் வழமைக்கு மாறான முக்கியத்துவத்துடன் உருவாகி யுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானில் அணு உலை திடீரென செயலிழந்தது

(ரோக்கியோ)

மேற்கு ஜப்பானிலுள்ள அணு உலை திடீரென செயல் இழந்ததாக அதன் கட்டுப் பாட்டாளர் தெரிவித்துள்ளார். எனினும் அதற்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை.

சாகா பிரதேசத்தில் உள்ள ஜெங்காய் அணு உலையில் 4ஆம் இலக்க விநியோக மையத்திலேயே இந்த கோளாறு ஏற்பட்ட தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கதிர் இயக்க (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தெய்வங்களின் வாகனங்கள் புதுக்குடியிருப்பில் திருட்டு

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் மக்கள் மீள் குடியமராத பகுதிகளில் உள்ள கோயில்களில் காணப்படும் தெய்வங்களின் வாகனங்களை எடுத்துச் சென்று விற்று காசாக்கும் செயல் நடைபெற்று வருகின்றது.

இரும்புகளையெல்லாம் பொறுக்கியெடுத்து விற்று முடித்த நிலையில் தற்போது தெய்வங்கள் அமரும் வாகனங்களின் மீது கவனம் திரும்பியுள்ளது. மக்களின் மீள் குடியமர்வு நடைபெற்ற பகுதிகளில் ஏனையவர்களின் தேங்காய்களை பொறுக்கி முதலில் விற்றனர்.

வீட்டை உடைத்துக் கதவு, நிலை, யன்னல் ஆகியவற்றை எடுத்தனர். இரும்பு பொறுக்குகிறோம் என்ற பெயரில் நல்ல நிலையிலுள்ளவாகங்களையும் எடுத்துச் சென்றனர்.

தற்போது இந்துத் தெய்வங்களின் வாகனங்கள் இவர்களின் இலக்காக மாறியுள்ளன. இதனைக் கண்ணுற்ற இந்தப் பகுதி மக்கள் பெரும் கவலையில் மூழ்கியுள்ளனர். (ச-5)

# யாழ். மருத்துவர்கள் பணி பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மருத்துவக் கவுன்சிலின் பதிவாளர் வைத்திய கலாநிதி என்.ஜே.நோனிஸ் மீது நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்து யாழ்.போதனா வைத்திய சாலை வைத்தியர்கள் நேற்றுக் காலை 8மணி தொடக்கம் 4 மணி நேரம் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மொறட்டுவவில் உள்ள அவரது வீட்டில் வைத்து இனந் தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்த பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்ததோடு நாடாளாவிய ரீதியில் இந்தப் போராட்டம் இடம்பெற்றதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

# சாரதி அனுமதிப்பத்திர பரீட்சை

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்து 2011-ம் ஆண்டு யூலை மாதம் 5-ம் திகதிக்கு முன்னர் இடம் பெற்ற எழுத்துப் பரீட்சை களில் சித்தியடைந்தவர்களுக்கான ஓட்டுநர் பரீட்சார்த்த பரீட்சை இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

அத்துடன் நாளை எழுத்துப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை உரிய நேர ஒழுங்கின்படி கிளிநொச்சி மாவட்டச் செலயலகத்தில் இடம்பெறும் என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபினி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### சிவபாதம் சிவதர்சன் B.A(Hons)



யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம் பெறும் சிவபாதம் சிவதர்சன் B.A(Hons) அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறோம்.

-நண்பர்கள்

(இ)

## நல்லாசிரியர் விருதுக்கான வாழ்த்தும் பாராட்டுக்களும்



செல்வி வரலக்ஷ்மி ஏரம்பமூர்த்தி
(ஆசிரியை யா/ வடஇந்து மகளிர் கல்லூரி)



செல்வி யசோதராதேவி ஏரம்பமூர்த்தி
(ஆசிரியை யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம்

யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களும் பன்னிரண்டு வருடங்களிற்கு மேல் கற்ற பாடசாலையில் ஆரம்பக் கல்வித் தரங்களில் சிறப்பான பணியாற்றி தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களையும் வழிப்படுத்திச் சேவையால் உயர்ந்து நல்லாசிரியர் விருதுக்குரித்தாகி ஜனாதிபதியிடம் அலரிமாளிகையில் கௌரவிப்புப் பெறும் சகோதரச் செல்விகளை பாராட்டுவதில் மகிழ்வெய்துகிறோம்.

"வாழ்க என்றும் வளமுடன்".

யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய நலன் விரும்பிகள்

(சி-4840)

## யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்
## நவோதயா பாடசாலை

### ஜனாதிபதி விருது பெறும் எமது தங்கத் தலைவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்



எமது பாடசாலை அதிபர்

**உயர்திரு. கந்தையா கனகராசா**

அவர்கள் வடமாகாணத்தின் சிறந்த அதிபராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



எமது பாடசாலையின் பிரதி அதிபர்

**திரு. சின்னத்துரை சோதிலிங்கம்**

அவர்கள் வலிகாமம் வலயத்தில் சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் இருவரும் 06.10.2011 இன்று வியாழக்கிழமை அலரி மாளிகையில் அதி மேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் "ஆசிரியர் பிரதீபா பிரபா" எனும் கௌரவ விருது வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர்.

இன்னல்கள் பல வந்த போதும் பாடசாலையைச் சொந்த இடத்தில் இயங்க வைத்து இரவு பகலாக பாடசாலையின் வளர்ச்சிக்காக தங்களை முழுமையாக அர்ப்பணித்து வரும் இவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன்விரும்பிகள்
யா/ வயாவிளான் ம.ம.வி

(6329)

## சேவை நலன் பாராட்டு

### திருமதி பொ. தவராஜலிங்கம்

பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை (SLTS I)



**சேவைக்காலம்**
**28.03.1990 - 12.09.2011**

காலத்தின் தேவை
தனையுணர்ந்து பாலகரைப்
பரிபாலித்து வந்தீர் - இப்போ
"ஓய்வு" எனும் எல்லையிலே
நிற்கின்ற உங்களது சேவை
தனை நினைத்து நெடிதுயர்ந்து
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

யா/ இடைக்காடு ம.வி. (6328) ஆசிரியர் கழகம்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று (06.10.2011) நடைபெறும் 27ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி பட்டம்பெறும் செல்வி **தர்ஷிகா தனுஷ்கோடி** (B.A) அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

கடாட்சம் குடும்பம்
(சித்தப்பா)
கொக்குவில்

## நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்

### திரு. க. செவ்வேள் LLB (Hons)

**Chairman AAA Ventures (Pvt) Ltd**
**(U.R.Friend Foundation)**

கூண்டுக் கிளிகளாய் கிராமத்தில் வாழ்ந்த எம்மை
சிகரத்தைத் தொட்டே சிம்மாசனத்தைப் பார்த்திட
எந்தையைப் போல எம்முடனே நீர் இருந்து
சுதந்திரமாய் நாம் உலவ வழிகாட்டி வைத்தீரே
அலரி மாளிகையென்ன, பாராளுமன்றமென்ன, தியகம
விளையாட்டு மைதானமென்ன, மிருகக்காட்சி சாலையென்ன,
சிற்றுண்டி வகை என்ன அப்பப்பா சிந்தை குளிருதையா...
கல்விச் சுற்றுலாவுக்காய் எமக்கு உதவிய திரு. க. செவ்வேள்
(Our Friend) அவர்களையும் அவர்தம் நிறுவன பணிக்குழு
உத்தியோகத்தர்களையும் வாயார
மனதார வாழ்த்தி நன்றியைத் தெரிவிப்பதில் அக மகிழ்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
ஊரெழு கணேச வித்தியாலயம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்

(சி-4641)

## இன்று ஒரு தகவல்

# குதிரை

"குதிரைக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டார் ஒருவர்.

"குதித்து ஓடத்தெரிந்தால் அது குதிரை. கனைத்துக்கொண்டே சுமக்கத்தெரிந்தால் அது கழுதை" என்று அதற்கு வேடிக்கையான விளக்கம் கொடுத்தார் இன்னொருத்தர்.

இந்த உலகத்தில் சுமப்பதற்கென்றே பிறந்தது கழுதை. ஓடவதற்கென்றே பிறந்தது குதிரை. அடுத்தவர்களின் முதுகில் சவாரி பண்ணுவதற்கென்றே பிறந்தவன் மனிதன்.

அதனால்தான் குதிரையின் முதுகில் ஏறி உட்கார்ந்துகொள்கிறான். அதுமட்டுமல்ல, அது அங்குமிங்கும் பார்க்காமல் வேகமாக ஓட வேண்டும் என்பதற்காக கண்ணடக்கம் மாட்டிவிடுகிறான். குதிரையின் கண் இருக்கிறதல்லவா அது கொஞ்சம் வித்தியாசமானது.

குதிரையின் தலையில் கண் பக்கவாட்டில் இருக்கும். இதனால் அதற்கு இரண்டு ஒற்றைக்கண் பார்வை கிடைக்கிறதாம். அது ஒரே சமயத்தில் தன்னுடைய இரண்டு பக்கவாட்டுத்திசைகளிலும் பார்க்க முடியுமாம். அது மட்டுமல்ல, தனக்குப்பின்னால் என்ன நடக்குதாம் என்பதையும் அதனால் பார்க்க முடியுமாம். நம்மால் அதனைப் போன்று பார்க்க முடிந்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும். அதன் உடம்பால் மறைக்கப்படும் பின் பகுதியை மட்டும்தான் குதிரையால் பார்க்க முடிவதில்லை. தனக்கு முன்னால் உள்ள ஒரு பொருளை இரண்டு கண்களாலும் பார்க்கும்போது கண்களின் முன்பக்கம் திருப்பி பார்வையை குவியப்படுத்தும், அப்பொழுது அதற்கு பக்கவாட்டுப் பார்வையுதம் பின்புறபார்வையும் மறைந்து விடும்.

அப்படி அது இரண்டு கண்களின் பார்வையையும் குவித்துப் பார்க்கும் போது அதனுடைய கண்கள் சுமார் 1.2 மீற்றருக்கு குறைவான தொலைவிலிருக்கும். பொருட்களை குவியப்படுத்த முடியாதாம். அதனால் அது தான் உண்ணும் இரையைக்கூட பார்ப்பதே இல்லையாம். வேடிக்கையாகத்தான் இருக்கிறதாம்.

நாம் கூட பல சமயங்களில் அவசரமாக சாப்பிடும்போது சாப்பிடுவது என்னவென்பதை கவனித்தா சாப்பிடுகின்றோம்? சாப்பிடுவது என்னவென்பது கைக்கும் வாய்க்கும் தான் வெளிச்சம். குதிரைக்கும் நமக்கும் இப்படியொரு ஒற்றுமை.

குதிரையை வண்டியில் கட்டும்போது, சவாரிசெய்யும் போதெல்லாம் அதன் கண்ணுக்கு- கண்ணடக்கம் என்று சொல்லி திரைபோட்டு மறைத்துவிடுவதெல்லாம் எதற்கென்றால்...

அப்பொழுதுதான் அது போகும் திசையில் மட்டும் கவனத்தை வைத்துக்கொண்டு ஓடும். பக்கத்திலும் பின்னாலேயும் என்ன நடக்கிறதென்பது அதற்கு தெரியாது. குதிரை பந்தயத்தில் தடை தாண்டும் போட்டிகளை பார்த்திருக்கிறீர்களா? நடுவில் வைத்திருக்கும் தடைகளை தாண்டி ஓடும்.

அந்த சமயத்திலெல்லாம் தரையையோ தடையையோ பார்க்க முடியாதாம். ஏதோ ஒரு குருட்டாம் போக்கில்தான் தாண்டுமாம். ஆனால் அது ஒரு விடயம்.

எந்த நேரத்தில் கால்களை தூக்கி எழுப்ப வேண்டும் என்பதை குதிரை மீது உட்கார்ந்திருப்பவர் சைகைகள் மூலமாக தெரிவித்துவிடுகிறார். அதை புரிந்துகொண்டு அது தாண்டிவிடுகிறது. அவ்வளவுதான். அவர் தவறுதலாக ஏதாவது காட்டிவிட்டால் குப்புர விழ வேண்டியதுதான். குதிரையின் கண்களை விட உயர்ந்த மட்டத்தில் இருக்கும் பொருளையும் அதனால் தெளிவாக பார்க்க முடியாது. மிகத் தூரத்தில் உள்ள பொருளையும் விபரமாக பார்க்க முடியாது. அதுமட்டுமல்ல நிறங்களையெல்லாம் அதனால் கண்டுபிடிக்க முடியாது.(நிறக்குருடு) சரி, இப்படியெல்லாம் இருந்தும் குதிரை எப்படி சமாளிக்கிறது? இதற்கு கைகொடுப்பது அதனுடைய கழுத்து. அதற்கு நீளமான கழுத்து. அதன் உதவியால் தலையை அவ்வப்போது தகுந்த நிலைமைக்கு மாற்றி திருப்பி தன்னுடைய கண்ணில் பொருள் தெளிவாக தெரியும் படி பண்ணிக்கொள்கிறது.

தலையை தூக்கிவிட்டால் தூரத்தில் உள்ளதை பார்க்கும். தாழ்த்திவிட்டால் அண்மையில் உள்ளதை பார்க்கும்.

கண்ணில் விழித்திரை ஒன்று இருக்கும் அல்லவா, அது மற்ற விலங்ககளுக்கு குழிவாக இருக்கும். குதிரைக்கு தட்டையாக இருக்கும். அதனால்தான் தலையை திருப்பி விம்பம் விழுவது மாதிரி பண்ணிக்கொள்ள முடிகிறதாம்.

ஒரு நல்ல தரமான குதிரை எப்படி இருக்கவேண்டும்? நெற்றி குறுகலாக இருக்க வேண்டும். இரண்டு பக்கமும் கண் சமமாக சரியாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால் அந்த குதிரை தன் தலைக்கு முன்னால் தெளிவாக இருப்பதை பார்க்க முடியும். அதுதான் உயர்தரமான குதிரை.

குதிரைக்கு பழக்கமும் பயிற்சியும் மிக முக்கியம். ஒருத்தர் ஒரு குதிரைக்கு பயிற்சிகொடுத்துக்கொண்டிருந்தார். அந்த குதிரை முன்னால் நின்றுகொண்டிருக்கும். இவர் பின்னால் கொஞ்ச தூரத்தில் இருந்து வேகமாக ஓடி வந்து ஒரு 'ஜம்ப்' பண்ணுவார். அப்படியே உயரே ஆகாயத்தில் எழும்பி குதிரையின் முதுகில் போய் பொத் என்று உட்காருவார். அதே விநாடி அந்தக் குதிரை பாய்ந்துஓட ஆரம்பித்து விடும். அப்படியொரு பயிற்சி.

இதை பார்த்து ஒரு பெரியவர் "இப்படி பொத்தென்று அதன் முதுகில் போய் விழுந்தால் குதிரையின் இடுப்பு என்னத்திற்கு ஆகும் உடைந்து விடாதா?" என்றார். இவர் அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

கொஞ்ச நாள் கழித்து பயிற்சி கொடுத்தவர் மறுபடியும் பார்த்தார்.

"ஐயா நீங்கள் சொன்னது மாதிரியே இடுப்பு உடைந்து போய் விட்டது" என்றார்.

"குதிரைக்கா?" என்று கேட்டார் அவர்.

"இல்லை... எனக்கு" என்றார் இவர்.

பார்த்தால் இடுப்பு வளைந்து போயிருந்தது.

"எப்படி?" என்று கேட்டார் அவர்.

"குதிரைக்கு பயிற்சியெல்லாம் நல்லாத்தான் கொடுத்தேன். அது முடிந்தபின் ஒரு தடவைதான் வழக்கம்போல பின்னால் இருந்து ஓடி வந்து ஸ்டைலாக 'ஜம்ப்' பண்ணி ஆகாயத்தில் எழும்பி குதிரையின் முதுகில் உட்காரப்போனேன். நான் உட்காருவதற்கு முன் குதிரை ஓட ஆரம்பித்து விட்டது. தரையில் உட்கார்ந்து விட்டேன் அது தான் இப்படி ஆகிவிட்டது" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விஜயதசமியை முன்னிட்டு பல்வேறு அங்குரார்ப்பண நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய விஜயதசமி விழாவும் ஆசிரியர் தின விழாவும் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் வீதித் திறப்பு வைபவம், கணனிக்கூடத் திறப்பு வைபவம், சமையலறை அத்திவாரமிடல் ஆகியவை நடைபெறவுள்ளது.

இதற்கமைய காலை 10 மணிக்கு கோயில் வீதியிலிருந்து பாடசாலை முகப்பு வரை இடைப்பட்ட தார்வீதியை யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா திறந்து வைக்கவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து காலை 10.15 மணியளவில் கணனிக் கூடத்தை வித்தியாலய பழைய மாணவர் சங்க தலைவரும் மாநகர முதல்வரின் செயலாளருமாகிய கு.பற்குணராஜா திறந்து வைக்கவுள்ளார்.

அதன் பின்னர் காலை 10.30 மணிக்கு ஆசிரியர் தின நிகழ்வுகள் இடம்பெறும். இதில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர ஞான தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவர்.

வாழ்த்துரையினை நல்லூர் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சி.மாணிக்கராஜா ஆற்றுவார்.

அதனைத்தொடர்ந்து மாணவர்களின் கௌரவிப்பு, பழைய மாணவர்களின் கௌரவிப்பு, ஆசிரிய கழகத்தினரின் கௌரவிப்பு, புலமைப் பரிசில் வகுப்பு ஆசிரியர் கௌரவிப்பு ஆகியவை இடம்பெற்று கடந்த மூன்றுஆண்டுகளில்புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கு அன்பளிப்பு பொதிகள் வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.

அத்தோடு முற்பகல் 11.30 மணிக்கு பூஜைகளுடன் ஏடு தொடக்கல் நிகழ்வும் மதியம் 12 மணிக்கு சமையல் அறைக்கு அத்திவாரம் இடுதல் என்பன நடைபெறும். அத்துடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (4-2-12)

## துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளில் சுகாதார மேம்பாட்டுச் சித்திரப் போட்டிகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே கோட்ட ரீதியாக நடத்தப்படவுள்ள சுகாதார மேம்பாட்டுச் சித்திரப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இதில் துணுக்காய் கோட்ட பாடசாலைகளுக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரியிலும் மாந்தை கிழக்குக் கோட்டப் பாடசாலைகளுக்கு மு/பாலிநகர் மகாவித்தியாலயத்திலும் ஒட்டுசுட்டான் கோட்டப் பாடசாலைகளுக்கு மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதென துணுக்காய் வலயக்கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இப் போட்டிகள் யாவும் பின்வரும் தலைப்புக்களில் நடைபெறவுள்ளன.

இதில் பிரிவு-I இல் தரம்-6,7,8 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மலசலகூட பாவனை, சுகாதாரப்பழக்க வழக்கங்கள் என்னும் தலைப்பிலும் பிரிவுII இல் தரம்-9,10,11 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சுத்தமான சூழல், குடிநீர் பாவனை என்றும் தலைப்பிலும் பிரிவுIII இல் தரம்-12,13 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு தொற்றுநோய், டெங்கு எனும் தலைப்பிலும் போட்டிகள் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(4-2-12-15)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 70 |
| தக்காளி | 50 | 70 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 30 | 60 | 40 |
| கரட் | 50 | 120 | 50 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 30 | 60 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 110 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 60 |
| பாகற்காய் | 100 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 70 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 80 | 80 |
| பயற்றங்காய் | 70 | 60 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 50 | 80 | 40 |
| முருங்கைக்காய் | 40 | 90 | 70 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | 30 | 15 | 20 |
| கீரை - 1 பிடி | 18 | 20 | 15 |
| தேசிக்காய் | 250 | 240 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 20 | 30 |

## இராசி பலன்

*06.10.2011*
*(புரட்டாதி 19, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*தசமி பின்னிரவு 1.23 மணிவரை*
*உத்தராடம் முற்பகல் 9.09 மணிவரை*
*இராகுகாலம் 9.32-03.02 மணிவரை*
*சுபநேரம் 7.32-9.02 மணிவரை*
*கேதார கௌரி விரத ஆரம்பம்,*
*விஜயதசமி.*

**மேடம்** இனிமையான நாள்,நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள்,தொழிலில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், சொத்துக்களால் நன்மையுண்டு.

**இடபம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள்,அதிகம் செலவாகும் என்று நினைத்த காரியம் ஒன்று குறைந்த செலவில் முடிவுக்கு வரும், பிரியமான சிலரோடு ஏற்பட்ட பிரச்சினை அகலும்.

**மிதுனம்** யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், திடீர் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறும், தொழில் சம்மந்தமான தொலைதூரச் செய்திகள் மகிழ்ச்சி தரும், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**சிங்கம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**கன்னி** சுப செலவுகள் வந்து சேரும் நாள், சேமிப்புக்கள் உயர்வடையும், மைத்துனர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்,புத்திரர்களால் பெருமைப்படுவீர்கள்.

**துலாம்** நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழும் நாள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் அதிகரிக்கும்,வருமானம் அதிகரிக்கும், உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** தொலைபேசி மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரும், பணவரவு திருப்தி தரும், வாக்கு மேன்மையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**மகரம்** சிந்தனைகள் அதிகரிக்கும் நாள், உடல்நலம் சீராகும், பெரியோர் சந்திப்புண்டு, தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கும்பம்** பயணத்தால் பலனுண்டு, தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கேட்பீர்கள், வேலைச்சுமை அதிகரிக்கும்.

**மீனம்** விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், தொலைதூரப் பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் வெற்றி பெறும், காரிய நன்மையுண்டு.

வளவன்

## நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யபட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியெனக் கண்டு மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டிற்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டிற்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் விதித்ததுடன் செலுத்தத்தவறின் இருகுற்றத்திற்கும் தலா ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

கையடக்கத்தொலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில்ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

* * * * * *

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா குறித்த நபர் மன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாக்க் கண்டு 10 அயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)

## விவசாயிகளுக்கு கடனுதவி பெறுவதற்கான படிவங்கள்

(நல்லூர்)

அச்சுவேலி இலங்கை வங்கியால் விவசாயிகளுக்கு கடன் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான கருத்தரங்குகள் அச்சுவேலி,இடைக்காடு, வளலாய், ஆவரங்கால், புத்தூர், சிறுப்பிட்டி போன்ற இடங்களில் வங்கி முகாமையாளர் தம்பையா புவேந்திரன் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

அக் கருத்தரங்குகளில் விவசாயிகளுக்கான கடன் வழங்கும் விண்ணப்பப்படிவங்களும் கடன் பெறுவது தொடர்பான ஆலோசனைகளும் அதன் அபிவிருத்தி தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்பொழுது கடன் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி விவசாய சம்மேளனங்களின் சிபார்சுடன் வங்கியில் விண்ணப்பப் படிவங்களை ஒப்படைப்பவர்களுக்கு கடன் வழங்கும் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதுவரை விண்ணபப்படிவங்களை பெறாதவர்கள் தமது பகுதியிலுள்ள விவசாய சம்மேளனங்கள் ஊடாக விண்ண்ப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறும் தெரி விக்கப்பட்டுள்ளது. (4-3-134)

யாழ்.செய்திகள்

## ஆசிரியர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

அஸ்ரன் கல்வி நிலைய ஆசிரிய தின நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்வி நிலைய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இதில்மாணவர்கள்மற்றும்ஆசிரியர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறும். (4-2-12)

* * * * *

(நல்லூர்)

உரும்பிராய் வடக்கு கணேசா சனச மூக நிலைய முன்பள்ளி ஆசிரியர் தின விழாவும் சிறுவர் தினவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு கணேசா சனசமூகநிலைய றமணன் அரங்கில் கணேசா சனசமூக நிலைய தலைர் ச.ஏகாம்பர நாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கானபரிசில்களை இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கோப்பாய் பிரிவினர் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர். (4-3-134)

* * * * *

(சாவகச்சேரி)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சபையினரால் நடாத்தப்படவுள்ளது. (4-3-29)

* * * * *

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தினவிழா இன்று வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் வலயக்கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள் கௌரவிக்கப் படவுள்ளதுடன் ஆசிரியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (4-3-29)

* * * * *

(கரவெட்டி)

வடமராட்சி வட இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியர் தினவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை சிரேஷ்ட மாணவ தலைவி செல்வி தியாகராஜா றஜீதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் தி.கிருஷ்ணானந்தன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (4-3-24)

## நிர்வாகசபைத்தெரிவு

யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் முதலாவது கூட்டம் கடந்த 3 ஆம் திகதி வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் வைத்தியசாலைப்பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.

வைத்தியசாலை அபிவிருத்திகுழுவின் 21 பேர் கொண்டகுழுவில் இருந்து 11 பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக பி.கிரிதரன், பிரதித்தலைவராக எம். பாலசுப்பிரமணியம் , செயலா ளராக எஸ்.பிரசாத், பொருளாளராக தி.விமலன் நிர்வாகசபை உறுப்பினர்களாக எஸ். செல்லத்துரை, எஸ்.உதயகுமார், டி. யூலியஸ், ப.பங்கேஸ்வரன், எஸ். வேதநாயகம், கே.சிவயோகநாதன், எஸ்.ஜெயசங்கர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக நியமிக்கப்பட்டவரின் நியமனம் சுகாதார அமைச்சர் அங்கீகரிக்கும் பட்சத்தில் நடைமுறைக்குவரும் என குறிப்பிடப்படுகின்றது. (4-3-134)

## வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே போட்டிகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபையின் சரசாலை பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை மற்றும் விவாதப் போட்டிகளும் முன்பள்ளி மாணவர்களிடையே பாடல் போட்டியும் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் சரசாலை பொது நூலக எல்லைக்குட்பட்ட மாணவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் நூலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

இப் போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டும் மாணவர்களுக்கு தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வில் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (4-3-29)

## யோகாசன வகுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உடல் உள ஆரோக்கியத்திற்கான யோகாசனமும் காலை தளர்வுப் பயிற்சி வகுப்பும் இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் உள்ள சைவபரிபாலனசபை மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

விஜயதசமி அன்று ஆரம்பமாகும் இப்புதிய வகுப்புக்களில் ஆண்கள், பெண்கள் வேறுபாடு இன்றி விசேட தேவையுடையவர்களும் கலந்து கொள்ளலாம்.

இப்பயிற்சி வகுப்புக்கள் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை நடைபெறும். பயிற்சியில் இணைய விரும்புவர்கள் பயிற்சி நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ந-8)

## நவராத்திரிவிழா நிகழ்வுகள்

(கரவெட்டி)

வடமராட்சி வடஇந்து மகளிர் கல்லூரி யின் விஜயதசமி விழா இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் தலைவி ஜெ.சுக ன்யா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருமதி றூபி நடனசபாபதி கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி கௌரவிக்கப்படவுள் ளார். (4-3-24)

* * * * *

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை பொது நூலக த்தின் வாணிவிழா இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4-3-29)

* * * * *

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய ஊழியர் நலன் புரிச்சங்கத்தின் வாணிவிழா இன்று வியாழக் கிழமை காலை 10 மணிக்கு வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4-3-29)

* * * * *

(இருபாலை)

கட்டைப்பிராய் தலைமணி சனசமூக நிலைய விஜயதசமிவிழா இன்று வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் வருகைதந்து சிறப்பிக்குமாறு நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (4-3-136)

* * * * *

(கரவெட்டி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வாணிவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி செ.சுந்தரரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-3-24)

* * * * *

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாவலர் மணிமண்டபத்தில் தினந்தோறும் பிற்பகல் 3.30 மணி முதல் 5.30 மணிவரை நவராத்திரி விழா நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று **நவராத்திரி விழாவும் வாழ்வும்** எனும் தொனிப்பொருளில் பொ. சந்திரவேல் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இதில் மூளாய் ஞானஒளி அறநெறிப்பாடசாலை,தெல்லிப்பளை துர்க்கையம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (4-12)

## இசைநாடகம்

(தொல்புரம்)

விஜயதசமியை முன்னிட்டு குந்தியின் செல்வன் எனும் புராண இசைநாடகம் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தில் இடம் பெறவுள்ளது. இவ் இசைநாடகத்தை கலாலய நாடக மன்றத்தினர் நிகழ்த் தவுள்ளனர். (ந-9)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)


தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு செல்வி விஜித்தா விஜயபாலா இன்னிசைக்கச்சேரி வழங்கவுள்ளார்.(4-12-35)

* * * * *

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பொரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் எதிர்வரும் 9 அம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிபூசை முடிவுற்றதும் **கண் ணன் வந்தான்** என்னும் விடயம் பற்றி ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர் கவிமணி க.ஆனந்தராசா சங்கீத கதாபிரசங்கம் செய்யவுள்ளார். (4-12-35)

# நவராத்திரி பாமாலை



வீரத்தின் புகலிடமாய் திகழும் வீரகாளியே
வில்வித்தைகளில் குருவானவளே
வாழ்விற்கு செல்வம் அளிக்கும் இலக்குமி தாயே
வையத்துள் வாழ்வாங்கு வாழ அருள் புரிபவளே
கருவிலே உருவை கொடுத்து நாவில் கனிவான பேச்சுடன் கல்வியை தருபவளே
அண்டமெலாம் காத்திடும் அன்னை பராசக்தியே -உன்
புகழ்பாட உனக்காக நவராத்திரி பாமாலை

*க.லறீனா ,*
*(யா/குப்பிளான் சைவ தமிழ் வித்தியாலயம்)*

# பொலிசார் கடமைக்காக துப்பாக்கியை பயன்படுத்தலாம்

## பொலிஸ் தலைமையகம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் தமது கடமைகளுக்காக துப்பாக்கியைக் பயன்படுத்துவதற்கு எவ்வித தடையும் இல்லை என பொலிஸ் தலைமையகம் அறிவித் துள்ளது.

கடமையின் தன்மைக்கு அமைய துப்பாக்கிகளை விநியோகிப்பது மற்றும் பயன்படுத்துவது தொடர்பில் தமது நிலைப்பாட்டிற்கு அமைய செயற்படுமாறு அனைத்து சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கும் பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கும் வல யங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளுக்கும் மாவட்டங்களுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகா ரிகளுக்கும் தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மற்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் பொலிஸ் மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள ஊடகப் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ்மா அதிபர் நேற்று முன்தினம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் வழங்கியுள்ள ஆலோசனைகளுக்கமைய அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் உடனடியாக செயற்பட வேண்டும் எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கடமையில் ஈடுபட்டுள்ளதுடன் பொலிஸ் அதிகாரிகளுக்கு துப்பாக்கிகளை பயன்படுத்துவது தொடர்பில் ஏதேனும் தடை உள்ளதென தகவல்கள் வெளியாகியிருந்தால் அது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மெக்ஸி புறொக்டர் தெரிவித்துள்ளார்.(4-2)

# ஜனாதிபதி மாளிகையும் தேர்தல் பிரசார களமாக மாறியுள்ளது

## ஐ.தே.க.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அலரி மாளிகையும் கண்டி, நுவரெலியா போன்ற இடங்களிலுள்ள ஜனாதிபதி மாளிகைகளும் இன்று கட்சி தேர்தல் பிரசார நிலைய்ங்களாக மாறியுள்ளத்தாக தெரிவித்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி பாதுகாப்புச் செயலாளர் தேர்தல் விதிகளை மீறி பிரசாரம் செய்து வருவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த முறைகேடுகள் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் பொலிஸ் தரப்பினரிடம் முறையிடப்பட்ட போதிலும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கத்தவறி வருவதாகவும் ஐ.தே.க. சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற விசேட செய்தியாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்க ஊடகவியலாளர்கள் மத்தியில் மேலும் தெளிவுபடுத்தும் போது கூறியதாவது, ஸ்தாபனக் கோவை சட்டத்தின் பிரகாரம் அமைச்சுச் செயலாளர்கள், அமைச்சு ஊழியர்கள், உள்ளூராட்சி சபை ஊழியர்கள், கல்விசார் ஊழியர்கள் எவரும் அரசியலில் ஈடுபட முடியாது. எனினும் கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களின் போதும் இம்முறை நடைபெறும் உள்ளூராட்சித் தேர்தலிலும் ஆளும் தரப்பின் தேர்தல் பிரசாரங்களில் இவர்கள் நேரடியாக ஈடுபடுத்தப்பட் டு வருகின்றனர்.

பாதுகாப்புச் செயலாளர் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளரின் தேர்தல் சந்திப்புக்களில் நேரடியாக பங்கேற்று உரையாற்றி வருகின்றனர். அத்துடன் பாடசாலை ஆசிரியர்களும் உள்ளூராட்சி துறை ஊழியர்களும் பிரசாரப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இவ்விடயம் தொடர்பில் தேர்தல் ஆணையாளரிடமும் பொலிஸாரிடமும் முறையிட்ட போதிலும் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்வதாக தெரியவில்லை. அரசின் அழுத்தம் காரணமாக அவர்களால் நடவடிக்கை எடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தேர்தல் ஆணையாளர் இது விடயத்தில் தொடர்ந்தும் பராமுகமாகச் செயற்படுவாறானால் நீதிமன்றத்தை நாடவேண்டிய நிலை ஏற்படலாம். கடந்த காலத்தைப் போன்று இவ்விடயத்தை பொருட்படுத்தாமல் கைவிடப் போவில்லை. தேர்தல் ஆணையாளர் தமது கடமையை நேர்மையாகவும் சட்ட வரம்புகளுக்கமையவும் மேற்கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

இந்தத் தேர்தலையாவது நீதியாகவும் நேர்மையானதாகவும் நடத்த வேண்டுமென நாம் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (4-2)

# கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர் வார ஆறாம் நாள் நிகழ்வுகள்

கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெற்று வரும் முதியோர் வார நிகழ்வுகளில் இன்று ஆறாம் நாள் நிகழ்வு காலை 8.30 மணிக்கு இல்ல அத்தியட்சகர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ,சிறப்பு விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்திய சாலை உளநல மருத்துவர் டாக்டர் திருமதி தயாபரணி பாரதிதாசன், கைதடி மத்திய மருந் தக வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். எப். அருள்நேசன் ,கைதடிஆயுள்வேத மருத்துவமனைப் பணிப்பாளர் திருமதி சிவசண் முகராஜா பிறேமா, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள கணக்காளர் திருமதி குமுதினி நிரஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள அலுவலர்கள் முதியோருடன் கலந்து ரையாடல் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (4-12)


# பாராட்டி வாழ்த்துகின்றோம் முதுகலைமாணி பட்டமளிப்பு

**திரு. சுவாம்பிள்ளை அன்ரனிராசன் (M.A.Public Admn (JF)**
**(Engineer Sri lanka Telecom-Jaffna)**

(6498)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை (06.10.2011 இல் நடைபெறவிருக்கும் பொதுப் பட்டமளிப்பு விழாவில், முதுகலைமாணி, பொது நிர்வாக துறையில் திறமை சித்தி (Merit Pass) பட்டம் பெறவிருக்கும் திரு.சுவாம்பிள்ளை அன்ரனிராசன் அவ்களை புனித அடைக்கல அன்னையின் அருள் வளங்கள் நிறையப் பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம். (6498)

வாழ்த்துவோர் திரு.திருமதி பிரகதீஸ்வரசர்மா குடும்பம்,
சிவஸ்ரீ சிவகுமராக்குருக்கள் குடும்பம் (கல்வியங்காடு),
சிவஸ்ரீ சாயி ஜீவானந்தக்குருக்கள் குடும்பம் (அவுஸ்திரேலியா)
சிவஸ்ரீ கைலை வாமதேவக்குருக்கள் குடும்பம் (நயினாதீவு)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**செல்வி கனிஸ் வினித்திரா கொன்சாலின் பீற்றர்**
**(B.B.A(Hons) Spl.fm**



முகாமைத்துவப் பிரிவில் கல்வி பயின்று முதலாம் வகுப்பில் சித்தியடைந்து இன்று (06.10.2011) வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 27ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் (B.B.A(Hons) Spl.fm பட்டம் பெறும் செல்வி கொ.கனிஸ் வினித்திரா அவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
அப்பா, அம்மா, தங்கை
யசோ நெல்ஸ்மன்-சுபி குடும்பம்
றொபின்சன்-சுஜீ குடும்பம்
இளவாலை மேற்கு,
இளவாலை.

(6497)

# 1st IN COM G.A.Q (FIRST EXAMINATION IN ARTS) வெளிவாரி

## யாழ்ப்பாணம் பேராதனைப் பல்கலைக்கழகம்


- மேற்படி பல்கலைக்கழகங்களினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
- புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

குறிப்பு:-

1. பேராதனை பல்கலைக்கழகத்தின் பதிவுகள் பல்கலைக்கழகத்தினால் மீண்டும் 14.10.2011 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
2. பேராதனை பல்கலைக்கழக பதிவுகள் மட்டும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
3. வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி இலவசம் ஆகும்.

விபரங்களுக்கு எஸ்.அருள்நங்கை (நிர்வாகி), புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி-4639)

# பயங்கரவாதிகளுக்கு துணை போனவருக்கு எதிராக குற்றவிசாரணை அவசியம்



பயங்கரவாதிகளுக்கும் பிரிவினைவாதத்திற்கும் துணைபோனவர்களுக்கு எதிராக உள்நாட்டில் விரைவில் போர்க்குற்ற விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும் என அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்கான சட்ட அங்கீகாரம் அரசியலமைப்பின் 157 ஆவது பிரிவில் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசிற்கும் தேசிய பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்படும் எந்தவொரு தரப்பையும் சட்டத்திலிருந்து தப்பிப்பதற்கு இடமளிக்க கூடாது. இலங்கைக்கு எதிரான சர்வதேசத்தின் சூழ்ச்சிகளின் பின்னணியில் உள்நாட்டில் சுதந்திரமாக உலாவும் பிரிவினைவாத சக்திகளே இருக்கின்றன.

அரசிற்கும் பாதுகாப்புத் தரப்புகளுக்கும் நாட்டின் இறையாண்மைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் உள்நாட்டிற்குள் இருந்து கொண்டு பலர் செயற்படுகின்றனர். ஐ.நா. உள்ளிட்ட சர்வதேசத்தின் இலங்கைக்கு எதிராக சதிகளுக்கு இவர்கள் தகவல்களை கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக ஐ.நாவின் நிபுணர்குழு அறிக்கைக்கு மிகவும் போலியான தகவல்களை நாட்டிற்கு எதிரான வகையில் உள்நாட்டிலிருந்தே வழங்கியுள்ளனர். இவ்வாறான தேசத்திற்கு பிரிவினைவாதத்திற்கு துணை சென்றவர்களையும் தொடர்ந்து துணை செல்பவர்களையும் விசேட நீதிமன்றில் போர்க்குற்றங்களின் அடிப்படையில் விசாரணை செய்ய வேண்டும்.

இலங்கை அரசியலமைப்பின் 157 ஆவது பிரிவில் பிரிவினைவாதத்திற்கு எதிரான சட்ட விதிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை பயன்படுத்தி உள்நாட்டில் செயற்படும் பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். பயங்கரவாதத்தில் இருந்து மீட்கப்பட்ட இலங்கையில் தற்போது அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்கின்றனர்.

இதனை சீர்குலைத்து நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துவதே சதிகாரர்களின் திட்டமாகும். இதற்கு ஏதுவான பொறிமுறைகளே தற்போது சர்வதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே சவால்களை இனங்கண்டு நாட்டில் பிரிவினைவாதக் கொள்கைகளுக்கு எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

(4-2)

# பிரிட்டனில் 5 வருடம் பணிபுரிவதால் மட்டும் நிரந்தர வதிவிட உரிமையை பெறமுடியாது

(கொழும்பு)

பிரித்தானியாவில் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பணியாற்றும் வெளிநாட்டவர்களுக்கு அந்நாட்டில் நிரந்தரமாக வாழ்வதற்கு அனுமதியளிக்கும் சட்டமொன்றை இல்லாதொழிக்க அந்நாட்டு அமைச்சர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் பிரித்தானியாவிலுள்ள பல்லாயிரக்கணக்கான குடியேற்றவாசிகள் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த வருடம் சுமார் 2 இலட்சத்து 41 ஆயிரம் வெளிநாட்டு குடியேற்றவாசிகளுக்கு பிரித்தானியாவில் குடியேறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. குடியேறுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இது தொழிற்கட்சி பதவிக்கு வந்தபோது அனுமதி வழங்கப்பட்டதை விட அதிக தொகையாகும்.

இந்நிலையில் பிரித்தானியாவில் நிரந்தர வதிவிட உரிமை வழங்கப்படும் குடியேற்றவாசிகளின் தொகையில் குறைப்புச் செய்ய தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் திட்டமிட்டுள்ளனர்.

அத்துடன் பிரித்தானியாவில் போதிய காலம் தங்கியுள்ள குடியேற்றவாசிகள் வாழ்க்கைத்துணைகளுக்கு பிரித்தானியாவில் கடவுச் சீட்டை வழங்குவதிலும் கட்டுப்பாடுகளை முன்னெடுக்க பிரித்தானிய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

பிரித்தானியாவுக்குள் நுழையும் குடியேற்றவாசிகளின் தேறிய தொகையில் குறைப்பை செய்வதற்கான பிரதமர் டேவிட் கமரூனின் இலக்கத்திற்கு இவ்வாறான கட்டுப்பாடுகளை முன்னெடுப்பது அவசியமென அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பிரித்தானிய அமைச்சர்களின் இந்த புதிய திட்டங்கள் இந்த வருட முடிவுக்குள் வெளிவிடப் பட்டுள்ளன.

இத் திட்டங்களின் கீழ் வெளிநாட்டவர்களுக்கு பிரித்தானியாவில் தொழில்புரிவதற்கான விசாவை பெறுவது தொடந்து சாத்தியமாகவுள்ள போதும் அந்நாட்டில் 5 வருடங்கள் சட்டபூர்வமாக தங்கியிருப்பதன்மூலம் அங்கு நிரந்தரமாக தங்கியிருக்கும் வாய்ப்பை பெற முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)

# அரச புலனாய்வு தகவல் பிரிவிற்கு பதினைந்து பட்டதாரிகள் நியமனம்

(கொழும்பு)

அரச புலனாய்வு தகவல் பிரிவிற்கு புதிதாக 15 பட்டதாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த வெற்றிடங்களுக்காக சுமார் 25 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நியமனம் வழங்கப்பட்டுள 15 பட்டதாரிகளும் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் ஓராண்டு காலம் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

உச்ச அளவிலான தகுதியுடைய பெரும் எண்ணிக்கையிலானோர் விண்ணப்பம் செய்திருந்ததாகவும் அவர்களில் மிகவும் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டதாகவும் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

(4-2)

# இலங்கையில் சீனாவின் தலையீடு தென்னாசியாவுக்கு அச்சுறுத்தல்

## இந்திய விமானப்படைத் தளபதி எச்சரிக்கை

இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் அதிகரித்துள்ள சீனாவின் செல்வாக்கான தென்னாசிய பிராந்தியத்தின் பாதுகாப்புக்குச் சாவாலை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய விமானப்படைத் தளபதி எயார்சீவ் மார்சல் எம்.ஏ.கே பிறவுண் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கு அயலில் உள்ள இலங்கையிலும் பாகிஸ்தானின் கட்டுப்பாட்டின் கீழுள்ள காஷ்மீரிலும் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளதாக்வஅவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அல்லது தென்கிழக்காசிய நாடுகளில் அதிகரித்துள்ள சீனாவின் தலையீடு தொடர்பில் இந்தியா அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ளது. இந்நாடுகளின் நிலைமைகளை இந்தியா உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சீனாவின் தலையீடுகள் அதிகரித்துள்ள இந்நாடுகளின் நிலைமைகளை இந்தியா உன்னிப்பாக கண்காணிக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை பாதுகாப்பு சவால் விடுக்கும் எந்தவொரு நடவடிக்கைகளையும் எதிர்கொள் வதற்கும் இந்தியா தயாராக இருக்க வேண்டும் என்றும் இந்திய விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்சல் பிறவுன் மேலும் தெரிவித்துள்ளார்.

(4-2)

# நுகர்வோர் பாதுகாப்பு சபை அமைக்க நடவடிக்கை

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நுகர்வோர் பாதுகாப்பு சபை அமைப்பதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன் மேற்கொண்டு வருகின்றார்.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவில் இருந்தும் இரண்டு பிரதி நிதிகளின் பெயர்களை அனுப்பிவைக்குமாறு கிராம சேவையாளர்களை கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

பெயர்கள் கிடைத்ததும் விரைவில் நுகர்வோர் பாதுகாப்புச் பை அமைக்கப்படுமென தெரிவிக்கப்படுகிறது. (4-3-134)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




அம்பலவாணன் ஜெயந்தன் (M.A)
(ஆசிரியர், யா/இந்துக்கல்லூரி)

கந்தையா ஸியாமினி (M.A)
(ஆசிரியர், யா/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்)

இன்று (06.10.2011) யாழ்.பல்கலைக்கழகத்தில் பண்பாட்டியல், முதுகலைமாணி பட்டங்கள் பெறும் இவர்கள் இருவரும் மேலும் பல உயர் பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- க.ராஜ்பிரபா–விஜிதா தம்பதிகள்,
ப.மோகனச் செல்வன் –ராஜபாமினி தம்பதிகள்,
இ.பாலேஸ்வரன் ராஜராஜினி தம்பதிகள்

பிடாரி கோயிலடி,
கொக்குவில். (6441)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாணி கல்வி நிலைய இயக்குநரும்
தமிழ்பாட ஆசானுமாகிய
திரு. K.சபேசன் B.A(HONS)




இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 27 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணிப் பட்டம் பெறுவதனை இட்டு பெருமகிழ்வடைவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாணி கல்வி நிலைய
சமூகத்தினர்,
உரும்பிராய், பலாலிவீதி.

(6449)

# நோய் தாக்கங்களுக்கு இலக்காவோர் குறித்து தகவல்கள் திரட்ட ஏற்பாடு

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நோய் தாக்கங்களுக்கு இலக்காகும் நபர்கள் தொடர்பான தகவல்களை திரட்டுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய சுகாதார வாரத்தினை முன்னிட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி விழிப்புணர்வு தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு இலக்காகும் மக்கள் தொடர்பில் தகவல்களைத் திரட்டும் பணிகளில் சுகாதார அமைச்சின் 25 குழுக்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச, கிராம மற்றும் மாவட்ட மட்டத்தில் இந்தத் தகவல்களைத் திரட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சில நோயாளர்களுக்கு உரிய சிகிச்சைகள் மற்றும் நிவாரணங்கள் வேண்டியுள்ள போதிலும் அவர்கள் தொடர்பான தகவல்கள் இல்லாமை அதற்கு பாதிப்பை ஏற்படுத்து வதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டி யுள்ளது. (4-2)

# நுகர்வோர் சேவைகள் அதிகாரசபையினால் கடந்த மாதம் பல சுற்றிவளைப்பு சம்பவங்கள்

(கொழும்பு)

கடந்த மாதத்தில் ஏழு ஆயிரம் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் சேவைகள் அதிகார சபை தெரிவிக்கின்றது.

பொருட்களின் விலை காட்சிப்படுத்தப்படாமை, காலாவதியான பொருட்களை மறைத்து வைத்திருந்தமை உள்ளிட்ட காரணங்களினால் குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகார சபையின் தலைவர் ரூமி மஹ்ரூப் தெரிவிக்கின்றார்.

அத்துடன் இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் அபராதமாக 62 கோடி ரூபா அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (4-2)

# அரசாங்கம் குறிப்பிடுவது போல் எமது கட்சியில் எந்த பிளவுமில்லை

(கொழும்பு)

அரசும் அரச ஊடகங்களும் குறிப்பிடும் அளவிற்கு எமது கட்சியில் எந்த பிளவுகளும் இல்லை. சிறுசிறு மனக்கசப்புகள் மாத்திரமே உள்ளன. இவைகள் எல்லாம் பெரும் பிரச்சினைகள் அல்ல. எமது ஒரே நோக்கம் ஆதரவாளர்களையும் எனக்கு வாக்களிப்பவர்களையும் வெற்றியடையச் செய்வதே ஆகும்.

நாம் அதற்காகவே பாடுபடுகின்றோம். தற்போது நாம் தேர்தல் ஒன்றிற்கு முகம் கொடுத்துள்ளோம். இதில் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு நகர தேர்தல் ஏற்பாடுகளில் அக்கறையுடன் இருக்கிறார். கருஜயசூரிய கம்பஹாவையும் சஜித் பிரேமதாச அம்பாந்தோட்டை நகரையும் பொறுப்பேற்று உள்ளனர். எமக்கிடையே பேதங்கள் இல்லை.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் அத்தநாயக்க காரியாலயத்தில் மாத்தளை மாநகரசபைத் தேர்தல் தொடர்பாக மாவட்டத்தின் ஐ.தே.க.உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கும் கூட்டத்திலேயே அவர் இப்படிக் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாத்தளை மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் அலுவிகாரவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர் மக்களுக்கு சலுகைகளை வழங்குவதாகக் கூறிய அரசு அதற்கு பதிலாக மக்களுக்கு மேலும் வாழ்க்கைப் பாரத்தை சுமத்தி உள்ளதாகவும் இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்து உள்ளது எனவும் இதுபற்றி அக்கறை கொள்வதில்லை எனவும் போக்குவரத்துக்குப் போதுமான பஸ் வண்டிகள் இல்லை இது போன்ற பல்வேறு நெருக்கடிகளுக்கு மக்கள் முகம்கொடுக்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

எனவே, யானை சின்னத்திற்கு வாக்களியங்க்ள். யானை சின்னத்திற்கு வாக்களித்து மாத்தளை மாநகர சபையினை எம்மிடம் தாருங்கள். இக்கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த அலுவிகார, மாத்தளை மாகாண சபை உறுப்பினர் சஞ்சிலகவிரதீன ஆகியோர் உரையாடினார்கள். (4-2)

# வவு.பொது வைத்தியசாலையில் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை ஏற்பாடு

வவுனியா அரச பொது வைத்தியசாலையில் நாளை மறுதினம் முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிகிச்சையை பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் முன்கூட்டியே தமது பெயர்களை வைத்தியசாலை அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

முகத்தில் ஏற்பட்டுள்ள தழும்புகள், காயங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள சுருக்கங்கள் போன்ற பல்வேறு பாதிப்புக்களை சீர் செய்யும் வகையில் இந்த பிளாஸ்டிக் சத்திர சிகிச்சையளிக்கப்படும் என வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

லண்டனில் இருந்து இதற்கென விசேடமாக சத்திர சிகிச்சை நிபுணர்கள் வருகை தந்து சத்திர சிகிச்சையினை மேற்கொள்வார்கள் என்றும் சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்த வைத்திய சேவை நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-2)

# இயற்பியலுக்கான நோபல் பரிசு மூன்று விஞ்ஞானிகளுக்கு கௌரவம்

யுனிவர்ஸ் என்கிற பேரண்டமானது தொடர்ந்து விரிவடைந்து வருகிறது என்கிற கண்டுபிடிப்புக்கு பின்னணியில் இருந்த மூன்று விஞ்ஞானிகளுக்கு இந்த ஆண்டுக்கான இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த சால்பெர்ல் முட்டர் மற்றும் அடம்ரிஸ் மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த பிரைன் ஷமிட் ஆகிய மூன்று பேருக்கும் கூட்டாக இந்த பரிசு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று பேரும் 1 ஏ சூப்பர்நோவா என்கிற நட்சத்திர பெருவெடிப்பு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டனர். அதன் முடிவில் இந்த பேரண்டமானது தொடர்ந்து விரிவடைந்து கொண்டிருப்பது மட்டுமல்ல அதன் வேகமும் தொடர்ந்து அதிகரித்தபடியே இருக்கிறது என்கிற முடிவை அறிவித்தனர்.

பேராசிரியர் பெர்ல்முட்டர் அவர்கள் 1988 ஆம் ஆண்டு தனது ஆய்வை ஆரம்பித்தார். ஏனைய இரு பேராசிரியர்கள் இணைந்து தங்களின் ஆய்வை 1994 ஆம் ஆண்டு ஆரம்பித்தார்.

இந்த இரண்டு குழுக்களும் தனித்தனியாக 1 ஏ என்கிற வகையை சேர்ந்த அடர்த்திமிக்க நட்சத்திரத்தின் பெருவெடிப்பை ஆராய்ந்தார்கள்.

இவர்கள் ஆய்வு செய்த இரண்டு நட்சத்திரங்களின் பெருவெடிப்பின் அளவும் ஏறக்குறைய ஒரே அளவாக இருந்ததால் இந்த பெருவெடிப்பின்போது அவை வெளிப்படுத்திய ஒளியின் அளவும் ஒரே அளவாக தெரிந்தது.

அதுமட்டுமல்ல பூமியிலிருந்து இந்த குறிப்பிட்ட ரக நட்சத்திரங்கள் இருந்த தொலைவும் ஏறக்குறைய ஒரே அளவாக இருந்ததையும் இது உறுதிப்படுத்தியது. (ச-4)


# ஓய்வூதியர்கள் கௌரவிப்பு விழா

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட பகிரங்க சேவை நலன்புரிச் சங்கத்தின் ஓய்வூதிய தின விழாவும் சிரேஷ்ட ஓய்வூதியர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்தில் மாவட்ட ஓய்வூதிய சங்கத் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ப.ஜெயராசா, மாவட்டப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், கௌரவ விருந்தினர்களாக கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வின் போது பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் சிரேஷ்ட ஓய்வூதியர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 10 ஓய்வூதியர்கள் மதிப்பளிக்கப்பட்டு கௌரவிக்கப்படவிருப்பதாக ஓய்வூதியர் சங்கத்தின் செயலாளர் சி.பெருமாள் தெரிவிக்கின்றார். (4-12-84)



இலங்கை சீனா சங்கம் நடத்திய ஆங்கிலமொழிமூல கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தினைப் பெற்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாப்கார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழான் போது அமைச்சர் டி.யூ.குணசேகர. வட்டு.மத்தியகல்லூரி மாணவி ஸ்ரீ.சொருபிகாவிற்கு பரிசில் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# அரசிற்கு பாடம் புகட்ட அதிகாரம் வழங்குங்கள்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு பாடமொன்றைப் புகட்ட அதிகாரம் வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். கோட்டை நடைபாதை வர்த்தகர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் தெரிவித்துள்ளார்.

வறிய மக்களைப் பாதுகாக்கும் ஒரே கட்சி ஐக்கிய தேசியக் கட்சி என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நடைபாதை மற்றும் மீன் வர்த்தகர்களைப் பாதுகாப்பது தமது கட்சியேயென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (4-9)

# தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பல்வேறு போட்டி நிகழ்வுகள்

பூநகரி பிரதேச சபை நிர்வாகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி பூநகரிக் கோட்டப் பாடசாலை மட்டத்திலும்,சனசமூக நிலைய மட்டத்திலும் பல்வேறு போட்டிகளை நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இதில் பூநகரி கோட்டத்தில் பாடசாலை மட்டத்தில் மாணவர் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு கவிதை, கட்டுரை, பேச்சு பொது அறிவுப் போட்டி ஆகியவற்றை நடத்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேசசபை தலைவர் பொ.ஸ்ரீஸ் காந்தராஜா தெரிவித்துள்ளார்.


தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலகத்தில் அங்கத்தவர்களாக சேர்வதற்கான பதிவுக் கட்டணத்தை 300 ரூபாவிலிருந்து 50 ரூபாவாக குறைத்து மாணவர்களுக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இத் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சனசமூக நிலையங்களின் செயற்பாட்டுத்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களுக்கான கௌரவிப்பும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

இச் செயற்பாடுகளை பூநகரி பிரதேச சபை உறுப்பினர்களும் பணிப்பாளர்களும் செயற்படுத்தி வருகின்றனர். (4-12-84)

# மாநகரங்களுக்கு ஓர் விமானநிலையம்

## ஜனாதிபதி வாக்குறுதி



(கொழும்பு)


கண்டிக்கு விமான நிலையம் ஒன்றை அமைத்து தருவதாக உறுதியளித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நுவரெலியாவுக்கும் விமான நிலையம் ஒன்றை நிர்மாணித்து வருவதாக தேர்தல் வாக்குறுதியொன்றை அளித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட மக்களின் பொருளாதார நலன் கருதி இந்த அபிவிருத்தி பணியை மேற்கொள்ள உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதனை தவிர நுவரெலியா மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் புதிய விளையாட்டு அரங்கம் அமைக் கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

நுவரெலியா மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார். தான் உறுதியளித்தது போல பயங்கர வாதத்தை தோற்கடித்து நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்துவதாக வழங்கிய உறுதி மொழியை தற்போது நிறைவேற்றி உள்ளதாக மகிந்த ராஜபக்ஷ மேலும் கூறியுள்ளார். (4-2)

# ஏற்கனவே வழங்கிய உறுதிமொழிகளை அரசாங்கம் நிறைவேற்றியுள்ளதா?

## ஐ.தே.க.பொதுச் செயலாளர் கேள்வி?



(கொழும்பு)

ஏற்கனவே வழங்கப்பட்ட பல உறுதிமொழிகளை நிறைவேற்ற தவறிய அரசாங்கம் தற்போது தேர்தலை முன்னிட்டு மக்களுக்கு பல உறுதிமொழிகளை வழங்கி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவி த்துள்ளார்.

இலங்கையில் இயற்கை எரிவாயு கிடைக்கும் என்ற புதிய எதிர் ப்பை மக்களுக்கு ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறியுள்ளார். இவை எல்லாம் தேர்தலில் தமக்கு சாதகமான நிலைமை உருவாக்க தெரிவிக்கும் தகவல்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கம் வழங்கிய 2 ஆயிரத்து 500 ரூபா ஊதிய அதிகரிப்பு என்பது அரசாங்க ஊழியர்களுக்கு கனவாக மாறியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் அத்தநாயக்க இந்தத் தகவல்களை வெளியிட்டுள்ளார். (4-2)

# யானைகளின் தொல்லைகளை தடுப்பதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

கல்ஓயாவிலிருந்து கந்தளாய் வரையான புகையிரதப் பாதையில் காட்டு யானைகள் விபத்துக்குள்ளாவதனை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என வனஜீவராசிகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

குறித்த புகையிரதப் பாதையில் பயணிக்கும் புகையிரதங்களில் மோதுண்டு பல காட்டு யானைகள் கடந்த காலங்களில் உயிரிழந்துள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவிக்கின்றார்.

இந்த நிலைமையை தடுப்பதற்காக புகையிரதத் தண்டவாளத்திற்கு அருகிலுள்ள மரங்களை வெட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மரங்கள் வெட்டப்படுவதன் மூலம் புகையிரதங்கள் பயணிப்பதை யானைகளால் தெளிவாக காணக்கூடியதாக இருக்கும் என அவர் கூறினார்.

அத்துடன் குறித்த பிரதேசத்தில் ரயில் பயணிக்கும் போது அதன் வேகத்தை குறைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன மேலும் தெரிவித்தார். (4-2)

# கேரளாவுக்குள் பிரவேசிக்கும் இலங்கையர் மீது கண்காணிப்பு

(கொழும்பு)

தென் இந்தியாவின் கேரள மாநிலத்திற்குள் பிரவேசிக்கும் இலங்கையர்கள் தொடர்பில் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்தியப் பொலிசாரும் புலனாய்வுப் பிரினரும் கூட்டாக இணைந்து இந்தக் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கொச்சி விமான நிலையத்தில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விமான நிலைய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளிலிருந்து கேரள மாநிலத்திற்கு விஜயம் செய்யும் நபர்கள் வீசா காலம் முடிவடைந்ததன் பின்னரும் தங்கியிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளை இணைத்துக் கொள்ளும் முக்கிய இடங்களில் ஒன்றாக மாலைதீவு மாறியுள்ளதாகவும் இலங்கையில் விடுதலைப்புலி சந்தேக நபர்களின் பிரச்சினை காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

பயங்கரவாத சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனால் தீவிர கண்காணிப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-2)

# புலிகளின் நிதிச் சேகரிப்பு நடவடிக்கை ஆரம்பம்

## வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டு

(கொழும்பு)


தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பினர் மீண்டும் நிதிச் சேகரிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமை மீறல் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகள் அழுத்தங்கள் பிரயோகித்து வரும் நிலையில் புலிகள் இந்த நிதி திரட்டல் முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைவதற்கு முன்னதாகவே நிதி திரட்டல் நடவடிக்கைகள் முடங்கியிருந்தன. தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு நிதி திரட்டல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாக புலனாய்வு மற்றும் வெளிவிவகார அமைச்சு தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆகியவற்றில் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்த சில தரப்பினர் முயற்சித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நிதி திரட்டுவது தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு இடையில் முரண்பாட்டு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-2)



யுத்தத்தின் போது அழிவடைந்த துணுக்காய் கல்வி வலயம் தற்போது 48 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

(படம்:-மல்லாவிச் செய்தியாளர்)

# எதிர்கால சந்ததியினரின் நலனை கருத்தில் கொண்டே நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்கால சந்ததியினரின் நலனை கருத்திற் கொண்டே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மாகம் ருஹுனுபுர நிர்வாக கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி நேற்று முன்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

தகுந்த சூழலில் கடமையாற்றுவதற்கான வாய்ப்பு கிடைக்கின்ற போதே அரச ஊழியர்கள் செயற்றிறனுடன் கூடிய சேவையை பெற்றுக் கொள்வதே இத்தகைய நிர்வாக கட்டடத் தொகுதி திறந்துவைக்கப்படுவதற்கான காரணம் எனவும் ஜனாதிபதிகூறினார்.

அம்பாந்தோட்டையில் மாத்திரமின்றி அனைத்து மாவட்டங்களிலும் அரச நிறுவனங்களை ஒன்றிணைத்து இத்தகைய நிர்வாக கட்டடத் தொகுதிகளை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே ஆட்சியிலிருந்த அரசாங்கம் அரச ஊழியர்களின் எண்ணிக்கையை ஆறு இலட்சமாக மட்டுப்படுத்தி இருந்தாலும் தற்போதைய அரசாங்கம் அந்த எண்ணிக்கையை 13 இலட்சம் வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (4-2)

# நீதிமன்ற அறிவிப்பாணையை ஏற்றுக் கொள்ள முடியாது

## அரசாங்கம் புதிய விளக்கம்

(கொழும்பு)

அரச தலைவர்களுக்கு பொருந்தும் ஹேக் சர்விஸ் என்ற சர்வதேச இணக்கப்பாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் பொருந்தும் என்பதால் அமெரிக்க நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பாணையை ஏற்றுக்கொள்ளமுடியாது எனக் கூறி இலங்கை அரசாங்கம் அதனை நிராகரித்துள்ளது. இது குறித்து இலங்கை அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளது.

புலிகளின் தளபதியான ரமேஷின் மனைவி வத்சலா சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் இலங்கை உட்பட்டது என்ற நிலைமையில் அமெரிக்காவில் இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்ய முடியாது என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் பதில் இலங்கை நீதியமைச்சினால் அமெரிக்க அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனாதிபதிக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றம் அறிவிப்பாணை விடுத்துள்ளமையானது இலங்கையின் இறையாண்மையை மீறும் செயல் எனவும் அரசாங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (4-2)

# விவசாயி நமது வளர்ப்புத் தாய்



## ஆன்மீகம் 02

இப்போது அமெரிக்காவில் ஈசா யோக மையத்திற்காக 1300 ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறோம். மையம் அங்கே வர இருக்கிறது. அங்கே விவசாயமும் நடை பெறுகிறது. அங்கே எல்லோரும் விவசாயம் நன்றாகச் செய்கிறார்கள் உருளைக் கிழங்கு பயிரிட்டிருக்கிறார்கள். தெரியும். சின்ன வயதிலிருந்தே பார்த்திருக்கிறேன் ஒ இப்படி இருக்கிறதே பார்க்கலாம் என்று சென்றால் ஓராளில்லை, வேலியில்லை, அடுத்தது நம்முடைய இடம். அந்தப்பகுதியில் நிறைய மான்கள், பன்றிகள் இருக்கின்றன. பல்வேறு மிருகங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கும் மாதத்தில் சுமர் 25 பேர் வந்து போவார்கள், அவ்வளவுதான்.

நம் நாட்டில் அப்படிக் கற்பனையும் செய்து பார்க்க முடியுமா? 1600 ஏக்கர் என்றால், எத்தனைபேர் வேலை செய்வோம்? உருளைக்கிழங்கு சாதாரணமல்ல. ஒரு ஏக்கருக்கு 20 பேர் இல்லாமல் வேலை செய்யமுடியாது.

## விவசாய முறைமையில் பல அனுகூலமான மாற்றங்களை கொண்டுவரக்கூடிய செயற்றிட்டம் அவசியம்

உருளைக் கிழங்கு எப்படி பயிரிட்டிருக்கிறார்கள் என்று பார்க்க ஆசை வந்து விட்டது. ஏனென்றால் சின்ன வயதிலிருந்தே உருளைக் கிழங்கு மலை, வெங்காய மலைகளை நான் பார்த்திருக்கிறேன். என் தாத்தாவின் தோட்டத்தில் மலை போல போடப்பட்டிருந்த போது, பன்றிகள் வந்து சாப்பிடும் என்று இரவு முழுவதும் அங்கே காவல் இருந்திருக்கிறோம் எனவே, உருளைக்கிழங்கு எப்படி வளர்க்கிறார்கள் பார்க்கலாம் என்று சென்றேன். 1600 ஏக்கரில் ஒரு தோட்டம் அதில் முழுவதும் உருளைக்கிழங்குதான் பயிர் செய்திருக்கிறார்கள். எல்லா பயிரும் சுமாராக ஓரளவு இருக்கிறது. எனக்கு உருளைக்கிழங்குப்பயிரின் முழு விளைச்சலும் எப்படியென்று போது நிலத்தைச்சுற்றி வேலியில்லை. ஆளில்லை. ஒன்றரை மைல் உள்ளே சென்றால்தான் அவருடைய வீட்டை அடைய முடியும். அத்தனை தொலைவில் இருக்கிறது. நான் அங்கே சென்று அவரிடம் "என் தாத்தாவும் உருளைக்கிழங்குதான் பயிரிட்டார். நீங்களும் உருளைக்கிழங்குதான் பயிரிட்டீர்கள்" என்று பேச ஆரம்பித்தேன். அந்த 1600 ஏக்கரிலும் உருளைக்கிழங்கு வளர்க்கிறார்கள்.

நம்மைப்போல வருடம் முழுவதும் அவர்கள் விவசாயம் செய்வதில்லை. ஒரு 5,6 மாதங்கள்தான் விவசாயம் செய்ய முடியும். அந்த ஐந்து மாதங்களில் ஒரு மூன்றுமாதம் அவர் மட்டும்தான் இருக்கிறார். வேறு யாரும் கிடையாது. ஓர் ஆள் கூட வ்ரவில்லை. இன்னும் இரண்டு 1600 ஏக்கரும் ஒருவரே பார்க்கிறார். நம்மை விட அதிம் விளைவிக்கிறார்கள். நிச்சயமாக நம்மை விட அதிகம் சம்பாதிக்கிறார்கள். அமெரிக்காவில செய்யும் அளவிற்கு இந்தியாவிலும் செய்ய வேண்டும் என்கிற தேவையில்லை. ஆனால், நிச்சயமாக சில மாற்றங்கள் கொண்டு வர முடியும். ஆதிகாலத்திலிருந்து என்ன செய்தோமோ அதையே செய்து கொண்டிருக்கிறோம். ஆதிகாலத்திலிருந்து இருக்கும் புரிந்து கொள்கின்ற தன்மையை நாம் வைத்துக் கொள்ளலாம். ஆனால், செயல் மாற்றத்தை நிச்சயம் நாம் கொண்டு வர வேண்டும். இல்லையென்றால் வளர்ச்சி இருக்காது. நான் உங்கள் பொருளுக்கு விலை கிடைக்காது என்று சொன்னது எதனால் என்றால், பொருளைப் பக்குவப்படுத்துகிற சக்தி நம்மிடம் இல்லை. தனியொரு விவசாயிக்கு அந்த சக்தி இப்போது வருவதற்கான வாய்ப்பு இல்லை. அதற்கென்று ஒரு திறமையான ஆள் இருந்தால் அவற்றை வாங்கி வேறோர் இடத்தல் பக்குவப்படுத்தி நல்ல விலைக்கு விற்றால், அதிலொரு பகுதி விவசாயியிற்கும் கிடைக்க வழி செய்ய முடியும். திறமையில்லைாமல் அந்த வேலையைச் செய்தால் நிச்சயமாக சிறப்பாக நடைபெறாது. நான் முன்பே சொன்னேன் விவசாயி பயிரிட வேண்டும். விளைச்சலை விற்பது, வேறு இடத்திற்கு எடுத்துப்போவது, விநியோகம் செய்வது அவருடைய வேலை இல்லை. அந்தப் பொறுப்பு, அந்தப்பணி அவருக்குக் கைவராது. எனவே இன்னொருவரை கொண்டு வர வேண்டும். அதற்காகத்தான் நாம் பெரிய நிறுவனத்தைக் கொண்டுவர வேண்டும் என்று முயற்சி செய்கிறோம். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# கிழக்கிலங்கையில் தொலையும் தொன்மைகளும் தொன்மைக் கிராமங்களும்

01

முன்னுரை

ஒரு நாட்டில் வரலாற்றுக்கு முற்பட்டகாலத்து நிகழ்ச்சிகளை விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து காட்டுவது தொல்லியல் ஆய்வுகளாகும். அதற்கு உதவியாக புவிச்சரிதவியல் (Geology) மானிடவியல் (Anthropology) சாசனவியல் (Zithology) நாணயங்கள் (Coins) இலக்கியங்கள் (Literatur) ஓலைச் சுவடிகள் (Manuseripts) கர்ண பரம்பரைக்கதைகள் (Mythology) போன்றவையும் துணை புரிகின்றன. அத் தோடு மேலாய்வு (Exploration) அகழ்வாராய்ச்சி (Excavation) போன்றனவும் உதவி புரிகின்றன. இலங்கைத்தீவின் ஆதிக்குடிகள் ஆதித்திராவிடர் என்பதும் மேற்படி பல்வேறு ஆய்வுகள் மூலம், பல ஆய்வாளர்களது ஆராய்ச்சிகள் மூலம் தெளிவாக நிறுவப்பட்டுள்ளது.

ஈழத்தீவின் ஆதிக்குடிகள் ஆதித் திராவிடர்களாவர். ஆதித் திராவிடர் இயற்கை, இலிங்க வழிபாட்டையும் சூல, வேல், நாக, யஷ்ஷ வழி பாட்டையும் உடையவர்களாவர். இவர்களை ஆய்வாளர்கள் "ஒஸ்ரலோயிட்" அல்லது "வேடொட்" என அழைத்தனர். இவர்கள் பேசிய மொழி "ஒஸ்ரிக்" எனப்படும். ஆதித் திராவிட மொழி திராவிடி[2] என வழங்கி பின்னர் தமிழி ஆகி தமிழா கிறது. இத்தீவில் பெரும் பகுதியில் வாழ்ந்தவர்களும் இம் மக்களே. இயக்கர், நாகர், வேடர் என வாழ்ந்தவர்களும் இத்திராவிட மக்களே. சிங்கள இனத்தின் முன்னோடி எனப்படும் விஜயன் இத்தீவிற்கு வரும்போது இருந்தவர்களும் இவர்களே. இலங்கையில் கிழக்கு, வடக்கு கரையோரம் முழுவதும் வாழ்ந்தவர்களும் இத்திராவிட மக்களே. இலங்கையில் விஜயன் வரும் முன்னரும் இங்கு பல இலிங்கக் கோயில்களும் வேல் கோயில்களும் இருந்ததை மகாவம்சம் போன்ற சிங்கள வரலாற்று நூல்களும் குறிப்பிடுகின்றன.[2] கரையோரப் பிரதேசம் எங்குமே இக்கோயில்களும் அதனை வழிபட்ட தமிழ் மக்களும் வாழ்ந்தனர். தேவநம்பிய தீஸனின் ஆட்சியின்போது பௌத்தமத வருகையுடன் பல தமிழர்கள் தமிழ் பௌத்தர்களாகினர். பௌத்த மதம் அரச மதம் ஆகியது. சிங்கள மொழியும் உவாகியதுடன் பௌத்தமும் சிங்களமும் ஒன்றாகின. தமிழ் மொழியும் இந்து சமயமும்

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

அருகிக் கொண்டே போகின்றதொரு நிலமை ஏற்பட்டது. அதன் தாக்கம் வாழ்விட பிரதேசங்களில் ஏற்படத் தொடங்கின. பலன்? தொன்மைகள் தொலைகின்றன. தொன்மைக் கிராமங்கள் பெயர் மாற்றம் பெறுகின்றன. குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதனால் பெயரே இல்லாமல் போகின்றது.

தமிழ் இனம் சிறுபான்மை இனமாகியது. மொழி ரீதியில் ஆக்கிரமிக்கப்பட்டு, பெரும்பான்மை இனத்தோடு அண்டி வாழும் தமிழ் மக்களும் மொழியும் அருகிப்போகிறது. இடைக்காலத்தில் ஏற்பட்ட பிச்சினைகளால் பூர்வீக மக்களும் புகலிடம்தேடி வேறு நாடுகளுக்கு ஒடிக்கொண்டே இருக்கின்றனர்.

எமது பண்டைய "வன்னிமைகள்" சிங்களத்தில் "ரட்ட" எனவாகிவிட்டன. குளம் என்பது "வெவ" எனவும், உதாரணம் கலாவெவ, மாதுறை என்பது மாதத்தற, தேவந்திர முனை என்பது தெவினுவர, மாய வனாறு என்பது தெதுறு ஓயா, காளி தேசம் என்பது காலி, கடம்ப நதி என்பது மல்வத்து ஓயா, பட்டிப் பளையாறு என்பது கல்லோயா, முதலிக்குளம் என்பது மொரவெவ, மணலாறு என்பது வெலிஓயா பார்வதி கிராமம் என்பது பதவிய திருகோணமலை என்பது திருக்கிணாமலை, அரிப்பு சந்தி என்பது அலியொலுவ, யாழ்ப்பாணம் என்பது யாப்பனே எனவும் நாடுமுழுவதுமே தமிழ் பெயர்கள் மாற்றப்பட்டு வருகின்றன.

இப்படித் தொலைந்து போகும் தொன்மையையும் தொலைந்து போன கிராமங்களைத் தேடுவதும் இக்கட்டுரையின் நோக்கமாகும். விரிவஞ்சி கிழக்கே மட்டும் முதலில் தேடலாம்.

கிழக்கிலங்கை

கிழக்கிலங்கையில் 1962 ஆம் ஆண்டுவரை திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்கள் மட்டுமே இருந்தன. தற்போது அம்பாறை மாவட்டம் என்று அழைக்கப்படும் பிரதேசம் 1962 இற்குப்பின்னரே தனியொரு மாவட்டமாகியது. அது முன்பு மட்டக்களப்பு மாவட்டத்துடன் இருந்தது. அங்கு காலம் காலமாக வசித்து வந்த தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டனர். அம்பாள் ஏரி என இருந்த இடம் அம்பாறை என மாற்றப்பட்டு சிங்கள மயமாக்கப்பட்டது[3]. பழம் பெரும் தமிழ் கிராமங்களின் பெயர்கள் எல்லாம் சிங்களப் பெயர்களாக மாற்றம் பெற்றன.

1962 இற்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டம் எனப்பட்ட பிரதேசம் தெற்கே குமணை தொடக்கம் வடக்கே வெருகல் வரை நீண்டு

செல்வி கதிர்காமன் தங்கேஸ்வரி

பரந்திருந்த பிரதேசமாக இருந்தது. இது அம்பாறை, விந்தனை, வெல்லச பகுதியையும் உள்ளடக்கிய பிரதேசமாக இருந்ததை பல ஆதாரங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. இதே போல் தனித்தமிழ் பிரதேசங்சங்கள் பல இருந்துள்ளன.

(தொடரும்)

# ஆன்மீகம், அறம், அறிவுப் பணிகளால் யாழ்.பல்கலைக்கழக உயர்விருதான கலாநிதிப் பட்டம் பெறும் ஆறுதிருமுருகன் அவர்களின் சிறப்புக்குறித்து சிவபூமி வெளியீடு-06.10.2011

## அகிலேஸ்வரக் குருக்களின் வாழ்த்துச் செய்தி

அகில உலக நாயகியாக, ஆதிசக்தியின் அம்சமாக விளங்கும் ஸ்ரீதுர்க்காதேவியின் பெரும்கருணையாலும், எம்மை ஆற்றுப்படுத்தி, ஆளாக்கிய அன்னை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் பூரண நல்லாசிகளாலும் தனது சமய, சமூக, ஆசிரியப் பணியில் தன்னை ஈடுபடுத்தி உலக தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற்று இன்று எமது தேவஸ்தானத்தின் சிறந்த தலைவராகவும் இருந்து தனது இறைபணியை ஆற்றிக்கொண்டு வாழ்ந்து வருகின்ற செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனுக்கு கௌரவப் பட்டமான (கலாநிதி பட்டத்தை யாழ். பல்கலைக்கழகம் வழங்கி பெருமைப்படுத்தியது தமிழுக்கும், சமயத்திற்கும் சமூகத்திற்கு கிடைத்த கௌரவமாக நாம் மகிழ்கின்றோம். தலைவர் அவர்கள் மென்மேலும் தனது பணியை ஆற்றுவதற்கு அம்பிகையின் திருவருளும், அன்னையின் ஆசியும் கிடைக்க எமது மனமார்ந்த நல்லாசிகள் உரித்தாகுக.

**லோகா, சமஸ்தா, சுகினோ, பவந்து**

**சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள், பிரதம சிவாச்சாரியார், ஸ்ரீ துர்க்கா தேவி, தேவஸ்தானம், துர்க்காபுரம், தெல்லிப்பழை.**

## இந்துமாமன்ற பொதுச்செயலரின் வாழ்த்துச் செய்தி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் அருள் பேணி யாழ்.மண்ணில் குழந்தைகள், மாணவர்கள், பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்கள், முதியோர்கள் மற்றும் எமது மக்கள் வேதனைகளாலும் சோதனைகளாலும் வாடிய காலகட்டத்தில் அபயக்கரம் நீட்டி சிவபூமி அறநிதியம் அமைத்து அரியபணிகள் ஆற்றிவரும் சைவத்தையும் தமிழையும் தன் இரு கண்களாகப் பேணிப் பாதுகாத்துவரும் தெய்வத் திருமகள் சிவத்தமிழ்ச் செல்வி அன்னையின் பட்டறையில் வளர்ந்த தளபதி ஆறு திருமுருகன் அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகம் இன்று (06.10.2011) கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவிப்பதையறிந்து மகிழ்கிறோம், பெருமையடைகிறோம்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் துணைத் தலைவரான செஞ்சொற்செல்வர் யாழ்.நல்லூரில் அகில இலங்கை இந்து மாமன்றப் பணியகம் அமையவும் யாழ். மாவட்டத்தில் மாமன்றப் பணிகள் மேலெடுத்துச் செல்லவும் அயராது உழைத்த-உழைத்து வருபவர் சகோதரர் ஆறுதிருமுருகன். யாழ். மாமன்றப் பணிமனையில் இந்து ஆராய்ச்சி நிலையத்தை அமைத்துள்ள மாமன்றம் அவரை அவரின் ஐம்பதாவது அகவையில் நல்லூர் ஆதீன முதல்வரினால் *சைவஞான பானு* என்ற பட்டத்தையளித்துக் கௌரவிக்க வழி செய்ததுடன் அவரை இந்து ஆராய்ச்சி நிலையத்தின் கௌரவ இயக்குநராகவும் நியமித்து மாமன்றம் பெருமையைத் தேடிக்கொண்டது. அந்த நிதியத்தில் இன்று இளைஞர்கள் சைவ வித்தகர்களாகப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இன்று ஆசிரியர் தினம் ஆசிரியர்களுக் கெல்லாம் பெருமைதரும் வகையில் மிளிர்ந்து விளங்கும் ஓர் ஆசிரியப்பெருந்தகை இன்று கௌரவிக்கப்படுவதும் அறிந்ததெனலாம்.கலைமகளை வணங்கிப் போற்றும் விஜயதசமி தினத்தில் இச்சிறப்பு இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றுக்கும் மேலாக வெள்ளையுள்ளம் படைத்த உத்தமர் தன்னலம் துறந்து மற்றவர் என்றும் சித்தமெனவாழும் மகான் எங்கள் அருமைச் சகோதரர் சைவஞானபானு ஆறுதிருமுருகன் அவரின் காலத்தில் வாழ்ந்து அவருடன் நெருங்கிப்பழகி இரவாது தொண்டாற்றுவதைப் பெருமையாகக் கருதுபவன் சிறியேன்.

சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகனைக் கௌரவிப்பதன் மூலம் யாழ்.பல்கலைக்கழகம் யாழ். மண்ணின் அறிவுத்திறனையும் பண்பாட்டையும் தமிழின் செழுமையையும் சைவத்தின் மகிமையையும் தன்னலமற்ற சேவை புரியும் சிவபூமிபுத்திரனைப் போற்றி இன்று பெருமை தேடிக்கொள்கிறது என்றால் மிகையாகாது.

எமதருமைச்சகோதரர் மன்றத்துணைத்தலைவர் இந்து ஆராய்ச்சிக்குரிய கௌரவஇயக்குநர் சிவபூமி அறங்காவலர் திலகம் பல ஆண்டுகள் நலமுற வாழ்ந்து தன் சீரிய பணிகளைத் தொடர்ந்துபுரிய ஸ்ரீதுர்க்கையம்மனின் அருட்கடாட்சம் வேண்டிநிற்கின்றோம்.

**அகில இலங்கை இந்துமாமன்றம் சார்பில்**

**கந்தையா நீலகண்டன், பொதுச்செயலர்.**

## ரிஷி தொண்டநாதனின் வாழ்த்துச் செய்தி

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்களுக்கு யாழ். பல்கலைகழகம் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கவுள்ளதை அறிந்து பெருமகிழச்சி அடைகிறோம். செஞ்சொற்செல்வர் அவர்கள் ஆற்றிவரும் பல்வேறு சமூகப் பணிகளை அங்கீகரிக்கும் வகையில் யாழ். பல்கலைக்கழகத்தின் எல்லா வளாகங்களும் ஏகமனதாக இந்தக் கலாநிதி பட்டத்தை வழங்க முன்வந்திருப்பது போற்றுதலுக்குரியது.

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள் சகல சுகங்களுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து, எமது மண்ணுக்கும் மக்களுக்கும் தொடர்ந்தும் ஓர் கலங்கரை விளக்காக ஒளிர வேண்டும் எனப் பரம் பொருளை வேண்டுகிறேன்.

**என்றும் அன்புடன் தொண்டுநாதன்,**

**ரிஷி தொண்டநாதன்.**

## மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி


சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் வழியில் ஆன்மீகப் பணியுடன் சமூகப்பணியினையும் சீரிய முறையில் நிறைவேற்றி வரும் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுகன் அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கி இன்று கௌரவிப்பதையிட்டு மகிழ்வடைகிறேன். அந் நிகழ்வினையொட்டி வெளியீடு செய்யப்படும் சிறப்பு மலரூடாக எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சுன்னாகம் கொத்தணி அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலய ஆசிரியராக இருந்த இவருக்கு சிறந்த ஆசிரியர் விருதினை வழங்கிக் கௌரவித்தோம். தொடர்ந்து ஸ்கந்தா ஆசிரியர் குழாத்தில் இணைக்கப்பட்ட இவர் அக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி வருகிறார்.

50ஆவது அகவையில் கால் பதித்துள்ள இவரது நாடறிந்த சமய சமூக சேவையினை யாழ். பல்கலைக்கழக மூதவை கருத்திலெடுத்து இளம் வயதினருக்கு இவ்வாறான உயர் விருதினை வழங்கும் சிந்தனை மாற்றம் வரவேற்கத்தக்கது. விஜயதசமி நன்னாளில், உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் வேளையில் எமது அதிபர் கௌரவ கலாநிதிப் பட்டம்பெறும் வரலாற்று நிகழ்வில் மாகாணக் கல்வித்திணைக்களத்தின் சார்பில் இவரைப்பாராட்டுவதுடன் மேலும் பல சமய, சமூக, கல்விப் பணிகளை நி[illegible] செயற்படுத்த எல்லாம் வல்ல அம்பிகையின் திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.

**ப.[illegible]க்னேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**

**[illegible].மாகாணம், [illegible]ன்னாகம்.**



## ஆறுதிருமுருகனின் சமய, சமூகப்பணிகள்

**சொற்பொழிவுகள் நிகழ்த்திய சாதனைகள்**

1.ஆறுதிருமுருகன் ஆன்மீக சொற்பொழிவு வீடியோநாடா லண்டனில் வெளியீடு.
2. Aruthirumurugan Spitual Lectures என்ற ஆங்கிலமொழி பெயர்ப்பு நூல் வெளியிட்டமை (அவுஸ்திரேலியாவில் அன்னை பவானி என்பவரால் வடிவமைக்கப்பட்டுள்ளமை)
3. aruthirumurugan.com என்ற இணையத்தளம் உருவாக்கப்பட்டமை.
4. 20க்கும் மேற்பட்ட தங்கப்பதக்க[illegible]கள் பெற்றமை.
5.25 க்கும் மேற்பட்ட பட்டங்கள் பெ[illegible]றமை.

*பணிகள்*

**ஆன்மீகப் பணிகள்**

1.கொழும்பு பழைய மாணவர் சங்கம்மூலம் கிடைத்த நிதியில் ஸ்கந்தாவில் ஸ்கந்தன் கோயில் திருப்பணி நிறைவேற்றியமை, ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாரின் உருவச்சிலை நிறுவியமை.

2.இந்து சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஆறுமுகநாவலரின் சிலையினை தம் சொந்த செலவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஸ்தாபித்தமை.

3.திருகோணமலை அலஸ்தோட்டத்தில் வாழும் 1200 அகதிக்குடும்பங்களின் வழிபாட்டுக்கான ஆனந்த விநாயகர் ஆலயம் ஸ்தாபித்தமை.

4.1995 இடப்பெயர்வுடன் கிளிநொச்சியில் குடியேறிய மக்களுக்காக 20க்கு மேற்பட்ட நாகதம்பிரான் விக்கிரகங்களைப்பிரதிஷ்டை செய்தமை.

5.யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர் வழிபாட்டிற்காக வித்தக விநாயகர் ஆலயம் அமைப்பதற்கு லண்டன் சிவயோகம் அறக்கட்டளை நிதியத்திட்மிருந்து நிதி பெற்று வழங்கியமை.

6.துர்க்காதேவி தேவஸ்தான அறப்பணிகளுக்கு உதவி வருகின்றமை.

**சமூகப் பணிகள்**

1. லண்டன் அநாதைகள் அறக்கட்டளை உதவியுடன் கண்பார்வையற்ற வாழ்வகச் சிறுவர்களுக்கு 16 இலட்சம் ரூபா செலவில் உடுவிலில் நிரந்தர இருப்பிடம் உருவாக்கிக்கொடுத்தமை.

2. 15 இலட்சம் ரூபா செலவில் கணவனை இழந்த இளம் விதவைகளுக்குப் புதிய வீடுகளை அமைத்து சிவயோகம் அன்னையர் குடியிருப்பு என்ற மாதிரிக்கிராமத்தை உருவாக்கியமை.

3.யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி ஆகிய இடங்களில் உள்ள சைவ சிறுவர் இல்லங்களுக்கு லண்டன் கனகதுர்க்கை அம்மன் ஆலய உதவியுடன் வருடா வருடம் நிதி கிடைக்க ஏற்பாடு செய்துள்ளமை.

4.யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட புற்றுநோயாளர் கருணை நிதியம் மூலம் சுமார் 13 இலட்சம் ரூபா வரை புற்று நோயாளருக்கு வழங்க ஏற்பாடு செய்தமை.

5.கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயத்தில் நடைபெற்ற தொடர் சொற்பொழிவுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்பு மூலம் விதவைகளுக்கு தையல் இயந்திரம் வழங்கியமை.

6.இணுவில் கிராமத்தில் மத்திய அறிவாலயம் அமைக்க கனடா, லண்டன் நாடுகளில் இணுவில் வாழ் மக்கள் உதவி பெற்றுக் கொண்டமை.

7.இந்துக்கள் கண்தானசபையை உருவாக்கியமை.

8.செவிப்புலன் குறைந்த மாணவர்களுக்கு அவுஸ்திரேலிய மருத்துவர் உதவி பெற்று அக் குறைநீக்கும் கருவிகள் பெற்றுக்கொடுத்தமை.

9.அரியாலையில் யுத்த அனர்த்தங்களால் அழிந்து போன தென்னை மர மீள் நடுகைக்காக 600 தென்னங்கன்றுகளை தனது லண்டன் சொற்பொழிவு மூலம் கிடைத்த பணத்தில் இருந்து பெற்றுக்கொடுத்தமை.

10.மனவளர்ச்சி குறைந்த சிறுவர்களுக்கான சிவபூமி சிறுவர் மன விருத்திப் பாடசாலையை கோண்டாவிலில் நிறுவியமை.

11.ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தை நிறுவ முக்கிய ஆலோசகராக விளங்கியமை.

12.திருநெல்வேலி சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் கிளை நிறுவனத்தை இணுவிலில் ஆரம்பிப்பதற்கு காணி கொள்வனவு செய்ய நிதி வழங்கியமை.

**மருத்துவப் பணிகள்**

1.லண்டன் சிவயோகம் அறக்கட்டளை உதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையின் 15 இலட்சம் ரூபா செலவில் நவீன கண் சத்திர சிகிச்சை நிலையம் உருவாக்கியமை, 18 இலட்சம் ரூபா செலவில் நவீன லேசர் இயந்திரம் வழங்கியமை.

2.யாழ்.போதனா வைத்தியசாலை சிறுநீரக நோயியல் பிரிவுக்கு பதினெட்டு இலட்சம் செலவில் இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்தை பிரித்தானிய இந்துக் கோவில்களின் உதவியுடன் வழங்கியமை.

3.கிளிநொச்சி வைத்தியசாலை அபிவிருத்திக்கு சுமார் இரண்டு இலட்சம் வழங்கியமை.

4.உடுவில் சபாபதிப்பிள்ளை வீதியில் லண்டன் கேன் புற்றுநோயாளர் உதவி நிறுவனத்தினூடாக புற்று நோயாளர் காப்பகம் அமைக்கும் பணியை தொடங்கியமை.

5.யாழ்.போதனாவைத்தியசாலை சத்திரசிகிச்சைப்பிரிவு மாணவர்களுக்கு போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றை லண்டன் அன்பர் ஒருவர் மூலம் பெற்றுக்கொடுத்தமை.

6.யாழ்.மருத்துவபீட மாணவர்களின் *அரும்புகள்* சிறுவர் இருதய நோய் சிகிச்சை நிதியத்திற்கு 50 ஆயிரம் ரூபா வழங்கியமை.

**கல்விப் பணிகள்**

1.சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையில் ஆறுதிருமுருகன் அறக்கொடை நிதியம் ஆரம்பித்து வறிய பிள்ளைகளுக்கு உதவுதல்.

2.யாழ்ப்பாணம் சப்பிரகமுவா, ரஜரட்டைப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் வசதி குறைந்த மாணவர்களின் கல்விக்கு உதவி பெற்றுக் கொடுத்தமை.

3.யாழ்.போதனா வைத்தியசாலை நூல் நிலையத்திற்கு விலைமதிப்பற்ற நூல்கள் பெற்றுக்கொடுத்தமை.

4.மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயாவின் பதிப்பிற்குள்ளாகாத நூல்கள் சிலவற்றை பதிப்பித்து வெளியிட்டமை.

5.தனது ஆசான் இ.மகாதேவா (தேவன் யாழ்ப்பாணம்) அவர்களது சிறுகதைத் தொகுதியை யாழ்.இலக்கிய வட்டத்தினூடாக வெளியிட நிதி வழங்கியமை.

6.யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர் சங்கத்திற்கு மருத்துவ நூல்கள், உபகரணங்கள் அன்பளிப்புச் செய்தமை.

## தன்னலமற்ற சேவையாளர்

அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவராக, சிவபூமி அறக்கட்டளைத் தலைவராக, துர்க்காதேவி தேவஸ்தான தலைவராக, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபராக பல்வேறு பாரிய ஸ்தாபனங்களில் தலைமை வகிப்பதுடன் அளப்பரிய ஆன்மீக, கல்வி சார், சமூகப்பணிகளாற்றி அனைவரது பேரன்பையும் பெருமதிப்பையும் பெற்றுத் திகழும் ஓர் உத்தமரை உளமார வாழ்த்துவதில் அளவில்லாத பேரின்பமும் பெருமிதமும் அடைகின்றேன்.

இவர் ஆற்றிய அர்ப்பணிப்பான சேவையைக் கருத்திற்கொண்டு யாழ்.பல்கலைக்கழகம் இவருக்கு கலாநிதி பட்டம் அளித்துக் கௌரவிப்பதையிட்டு கல்விச் சமூகம் மனநிறைவு கொள்கின்றது.இவருக்கு இறைவன் அளித்த அருட்கொடையாகிய நாவன்மைத் திறனால் உலகின் எல்லாத் திசைகளுக்கும் சென்று ஆன்மீகச் சொற்பொழிவுகள் நடத்தி புலம்பெயர் தமிழர் மனங்களைக் கவர்ந்திழுத்து அவர்கள் அன்புடன் அளித்த நிதி முழுவதையும் தனது நாட்டின் வளர்ச்சிக்காக, மாணவர்க்காக, தாய்மாருக்காக, கணவனை இழந்து வறுமையில் வாடுபவர்களுக்காக, முதியவர்களுக்காக, ஊனமுற்றோருக்காக, ஆலயத்திருப்பணிகளுக்காக, வேறு பொது நன்மைகட்காக தானம் செய்த புண்ணிய பயிர் இவர்.

தனி மனிதன் ஒருவன் ஆற்றுவதற்குக் கற்பனை கூடப் பண்ண முடியாத பாரிய பணிகளை திரு ஆறுதிருமுருகன் காலத்தை விரயமாக்காது ஒவ்வொரு நிமிடத்தையும் பொன்னாக மதித்து பயனுள்ளதாக்கி நம் கண்முன்னே ஓர் தெய்வப் பிறவியாக பார்வைக்கு ஓர் எளிய மனிதராக எம்மத்தியில் உலாவுகின்றார்.

இவருக்குச் சாலவும் பொருந்தக் கூடிய பட்டம் பெற வைத்த பெருமானுக்கு நன்றி கூறுவதுடன் இவர் மேலும் பல்லாண்டு உடல் ஆரோக்கியத்துடன் நம் கண்முன்னே வாழ்ந்து தொடர்ந்தும் தொண்டாற்றத் தேவையான செல்வத்தை வாரிவழங்கியருளுமாறு பெருங்கருணைப் பேராறான சிவனாரின் பாதகமலங்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

**க.சிவாஜி, உப தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**

## கௌரவ கலாநிதி பட்டம் பெறும் ஆறுதிருமுருகன்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் தமது வருடாந்த பட்டமளிப்பு விழாக்களின் போது அவ்வப்போது சமூகத்திற்கு முக்கிய பங்காற்றியவர்களுக்கு கௌரவ கலாநிதி பட்டமளித்து சிறப்பிப்பது பாராட்டிற்குரிய ஒரு செயலாகும். இந்த வகையிலே இம்முறை மிகவும் பொருத்தமான ஒருவருக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் கொடுத்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது. பலராலும் அறியப்பட்ட சமய, சமூக தொண்டரான ஆறுதிருமுருகன் இப்பட்டத்தைப் பெறுவதற்கு மிகவும் பொருத்தமானவரே.

சமய சொற்பொழிவாளராக அறிமுகமான ஆறுதிருமுருகன் தனது பேச்சுவன்மையால் செஞ்சொற்செல்வர் என்று அழைக்கப்பட்டார். சமயச் சொற்பொழிவுகளுடன் கம்பன் கழகத்துடன் இணைந்து இவர் ஆற்றிய சொற்பொழிவுகள்,பட்டிமன்ற உரைகள் இவரை நாடறியவைத்து காலப்போக்கிலே பல நாடுகளிலும் பிரபலமாக்கியமை குறிப்பிடத்தக்கது. புலம்பெயர் தமிழர்கள் உலகெங்கும் பரவலாகிய பின்னர் இவரது பணி சர்வதேசமயப்பட்டது.

ஒரு ஆசிரியராகப் பணிபுரிய ஆரம்பித்த இவர் தற்போது ஸ்கந்தவரோதயக்கல்லூரி அதிபராக பணியாற்றுவதுடன் பல சமய, சமூக நிறுவனங்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டு செயற்பட்டு வருகின்றார். அகில இலங்கை இந்துமாமன்றம், மனிதநேயம் இவற்றின் உதவியுடன் பல்வேறு பணிகளை ஆற்றிவருகின்றார். தற்போது துர்க்கை அம்மன் தேவஸ்தான அறங்காவலர் குழு தலைவராக இருந்து சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து சிறப்புறச் செய்துவருகின்றமை பாராட்டிற்குரியது.

துர்க்கை அம்மன் அறக்கட்டளை நிதி மூலம் சமூகப்பணிகளை மேற்கொண்டு வருவதன் மூலம் வறிய மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் உதவும் பணியை செவ்வனே நிர்வகிக்கின்றார். தொல்புரம் முதியோர் இல்லம், கோண்டாவில் மாற்றுவலுவுள்ளோர் நிலையம் போன்ற நிறுவனங்களின் பொறுப்பாளராக இருந்து சிறப்பான சமூகப்பணிகளை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதிவளங்களைத்திரட்டி அதன் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையின் முக்கிய பல தேவைகளை எல்லாம் நிறைவேற்றி வைத்தியசாலையின் மேம்பாட்டிற்கு வழிவகுத்துள்ளார். கீரிமலையில் எமது தமிழ் மக்கள் அபரக்கிரிகைகள் செய்வதற்கான ஒரு மடம் ஒன்றையும் நிறுவுவதிலும் முன்னின்று செயற்படும் ஆறுதிருமுருகன் ஓய்வின்றி அயராது உழைக்கின்றார்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காண்கின்ற இந்துமதக்கருத்துக்கு ஒத்ததாக இவரது பணிகளை இனங்காண முடிகின்றது. மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற புரிதலோடு பணியாற்றும் ஆறுதிருமுருகனை சரியாக இணங்கண்டு அவருக்கு கௌரவ கலாநிதி பட்டம் அளித்த யாழ்.பல்கலைக்கழகத்தினர் அவரை மட்டுமன்றி தம்மையும் சிறப்பித்துள்ளனர். அகில இலங்கை இந்துமாமன்றமும் இவரது ஆன்மீகப்பணிகளை அங்கீகரிப்பதுடன் இவருக்குக் கிடைத்த கலாநிதிப்பட்டத்திற்காக இவரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றது.

**திரு.வி.கயிலாயப்பிள்ளை**

**தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்.**

# நவீன உலகிற்கேற்ப மாணவரை உருவாக்கிட ஆசிரியரின் உந்து சக்தியுள்ள ஆளுமை அவசியம்

"கல்வியே வாழ்க்கை, வாழ்க்கையே கல்வி" என்ற தத்துவ அடிப்படையில் மாணவரின் உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்தல் அவர்களின் வாழ்வு, அவர்களுக்கும் சமூகத்திற்கும் பயனுறத் துலங்கச் செய்தல் ஆகிய பணிகள் ஆசிரியரின் ஆளுமையிலே தங்கியுள்ளன. ஆளுமையானது ஒருவரின் நடத்தைக் கோலங்களும், உளத்திறன்களும், மனவெழுச்சிகளும் சேர்ந்த உடல்,உள அமைப்பைக் குறித்து நிற்கின்றது. அதாவது ஒருவனது உளச்சார்பு, அறிவு, மனப்பாங்கு, கவர்ச்சி, சூழலுடனான இடைவினை என்பவற்றையும் இப்பண்புக் கூறுகள் அவனது சிந்தனை, உணர்ச்சி, செயல் என்பவற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தினை அழுத்துவதையும் ஆளுமை எனலாம். எலியட் என்பவர் 'ஓர் ஆசிரியனின் உயர்ந்த தகைமையானது, சிரமமான பணிகளை ஒழுங்காகச் செய்வதில் மட்டும் தங்கியிருக்கவில்லை. ஆனால்,தமது உள ஒழுக்க ஆளுமையினாலும் முன்மாதிரியான நடத்தைகளினாலும் தமது மாணவர்களை வழிகாட்டி ஊக்குவித்தலில் தங்கியுள்ளது' எனக் கூறியுள்ளார். லூசியன் செவே வரலாற்றுப் பொருள் முதல்வாத அடிப்படையில் தோன்றுகின்ற சமூக ஆக்கங்களுக்கு ஏற்றவாறு மனித ஆளுமை விருத்தியடைகிறது என்கிறார்.

பெரதுவாகக் கற்பித்தல் என்பது மாணவரின் அறிவையும், திறனையும், மனப்பாங்கையும் மேலும் மேம்பாடடையச் செய்து அவனை முழுமனிதனாக்க வழிகாட்டுதலாகும். மரபுரீதியான கற்பித்தலிலும் ஒருபடி உயர்வாக அகராதியில் கற்பித்தல் என்றால் ஒருவிடயத்தை எவ்வாறு செய்வது எனக் காட்டுதல் அதைப் புரிந்து கொள்ளவைத்தல், நெறிப்படுத்தல் இது நுணுக்கமாகத் துலங்குவதற்கு ஏன்?, என்ன?, யார்?, எப்பொழுது?, எங்கே?, என்னும் வினாக்களை எழுப்புதல் ஆகியவையும் உள்ளடக்கலாம். எனவே, கற்பித்தல், கற்றல் செயற்பாடு வெற்றி பெறுவது ஆசிரியரின் ஆளுமையில் தங்கியுள்ளது.

### கல்வி

மனிதவர்க்கம் இன்று ஒரு புதிய யுகத்தின் எழுச்சியின் வாயிலில் நுழைந்துள்ளது. கல்வியைப் பொறுத்தவரையில் அறிவு மிகத்துரிதமாகப் பரவிக் கொண்டு வருகிறது. உலகின் துரித வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும், உயர்ச்சிக்கும் ஏற்ப உகந்த கல்வியைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவது ஆசிரியரின் ஆளுமையில் தங்கியுள்ளது.

### வகுப்பறை நிர்வாகம்

வகுப்பறை நிர்வாகம் திறம்படச் செயற்பட ஆசிரியரின் ஆளுமையே மூலவேராகும். வகுப்பறையில் ஆசிரியரே முதல் நிலை முகாமையாளராவார். (First Line Manager) கற்றல் கற்பித்தற் செயற்பாடு அபிவிருத்தி பெற பாடசாலை என்ற கல்வி நிறுவனத்தின் இயல்பை கற்றல் அனைத்தும் கூட்டுணர்வு (Colle giality) மனப்பாங்கின் செயற்பாடாக அமைதல் விரும்பத்தக்கது. ஆசிரியரின் ஆளுமையைப் பொறுத்தே இச்செயற்பாடும் செம்மையுறும். அவரின் நடத்தையைப் பொறுத்துத் தொழில் வெற்றி வாய்ப்பும் மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொணர்வதும் அவற்றை நெறிப் படுத்தலும் ஆசிரியரின் தனித்துவ மான ஆளுமையில் தங்கியுள்ளது. மாணவர்களின் நிலையை அறிந்து தெரிந்ததிலிருந்து தெரியாததிற்கு இட்டுச் செல்லும் அணுகுமுறையும், அவர் கையாளும் கற்பித்தல் துணைச் சாதனங்களும் நவீன கற்பித்தல் முறைகளும் அவரின் சிறந்த தகுதி நிலையை உறுதிப்படுத்துவன. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட எல்லா மாணவரும் கற்றல் வேண்டும் என்ற நோக்கில் அவர்களின் தனியாள் வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு அவற்றுக்குரியதான உளவியல் அணுகுமுறைக்ளைக் கையாள்வது ஆசிரியரின் ஆளுமையில் தங்கியுள்ளது.

### அபிவிருத்தி

பாடசாலை என்ற கல்வி நிறுவனத்தின் கற்றில், கற்பித்தல் செயற்பாடு அனைத்தும் அதன் அபிவிருத்தியில் தங்கியுள்ளது. சமுதாய முன்னேற்றம் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றியில் தங்கியுள்ளது. ஆகவே பாடசாலையில் உள்ள வளங்கள் அதாவது மனித வளங்கள், பௌதீக வளங்கள், நிதி, காலம் ஆகியவற்றைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவது ஆசிரியர்களின் பங்களிப்பில் தங்கியுள்ளது. இப்பங்களிப்பு ஒவ்வொரு ஆசிரியனதும் ஆளுமையை வேண்டி நிற்கின்றது. பாடசாலையில் இவர்கள் தமது கடமை விடயங்களில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு அர்ப்பணிப்புச் செயற்பாடுடையவராகவும், சமூகத்திற்கு பொறுப்புக் கூறுபவராகவும் (Answerablity) மேல் நிலை அலுவலர்களுக்கு நிர்வாக விடயங்களில் கணக்குக் கொடுப்பவராகவும் (Accountability) ஆசிரியர் தம்மை தயார்படுத்திக் கொள்வதும் அவரின் ஆளுமையில் (Personality) தங்கியுள்ளது.

### மகிமையும் பெருமையும்

ஆசிரியர் முன்நின்று பாடசாலை, சமூகம் தொடர்பான பணிகளில் உழைக்கும் பொழுது ஆசிரியரின் ஆளுமை எழுச்சியுறும், தலைமைத்துவப் பண்பு (Leadership) வளர்ச்சியுறும், ஆசிரியர் மாணவ சமூகம் உறவில் மகிழ்ச்சிகரமான கல்வி நிலை ஏற்படும். அவர்களின் நடத்தைக் கோலங்களே அவரின் ஆளுமையை எடுத்துக் காட்டுவன. இவர்கள் சமூக நலனுக்காகத் தன்னை அர்ப்பணிக்கும் (Dedication) பொழுதுதான் அவரின் ஆளுமையினால் சமூகம் பயன்பெறும். மாணவ உலகில் அவருக்கு இருக்கும் மகிமையும் பெருமையும் மதிப்பிடற்குரியதாகும்.

### வாண்மைத்துவம்

ஆசிரியர் தம் கல்வித் தகைமையில் உயர்ச்சியும், தொழில் வாண்மைத்துவப் பயிற்சியும் பதவி நிலை உயர்வும் நேர்மையான முறையில் பெற முயற்சிக்க வேண்டும். வளரும் இளம் சமூகத்திற்கு உயிரூட்டமுள்ள கல்வியைச் சிறப்பாக அளிப்பதற்கு ஆசிரியர் கல்வி என்னும் பயிரை வளர்க்கும் தோட்டக்காரனாகத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதையே ஆசிரியர்களின் தந்தை என புகழ் பூத்த பெஸ்டலோசி செயலுருவப் படுத்தினார். இவரின் வாழ்க்கை வர லாறே கல்வி வரலாறாகும்.

'நான் ஆசிரியனாகவே இருப்பேன், ஆசிரியனாகவே வாழ்வேன், என்றும், இவ்வாசிரியத்தொழிலால் நான் கவரப்பட்டுள்ளேன்' என்றும் அவர் கூறினார். அவரின் வாழ்வு ஆசிரியரின் ஆளுமைக்குச் சிறந்த சான்றாகும்.

### ஆளுமை வளர்ச்சி

ஆசிரியரைப்பற்றி மாணவர்களிடம் நல்ல மனப்பாங்கிருந்தால் மட்டுமே ஆசிரியர்கள் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கு துணைபுரியலாம். ஆளுமை

## இன்று ஆசிரியர் தினம்

வளர்ச்சியில் பல்வேறு விதத்தில் ஆசிரியரின் ஆளுமை செல்வாக்குப் பெறும். அவை,

1. ஆசிரியர்களின் தன்னாதிக்க, ஒருமைப்பாடு நடத்தை
2. ஆசிரியரின் வகுப்பறை நிர்வாக முறை

### நுட்ப அறிவு ஏன்?

ஆசிரியர் மாணவர்களின் கல்வி முயற்சி, தொழில் தெரிவு முதலியவற்றில் வழிகாட்டுவதற்கு உதவுமுகமாக ஆளுமை அளவிடுதல் பற்றிய நுட்ப அறிவு பெற்றிருப்பின் கற்றல், கற்பித்தல் செயற்பாடு சிறப்பாக அமையும்.

### மனித நேயம்

ஆசிரியரின் ஆளுமையின் அடித்தளம் மனித நேயமாகும். இன்று கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர் மாணவர் உறவாடல் பண்பு வலுப்பெற்று வருகின்றது. ஆசிரியர் தம்தொழில் பற்றுதியுடையவராகத் திகழ வேண்டும். தாம் சமூகப்பணியாளன் என்ற உணர்வு ஆசிரியரின் உள்ளத்திலிருந்து உதயமாக வேண்டும். புன்னகை பூத்த முகத்தவராகவும் நகைச்சுவையாளராகவும் மாணவர் மேல் அன்பு, பரிவு கொண்டவராகவும், வழி காட்டியாகவும் திகழும் ஆசிரியரே சிறந்த ஆளுமை உடையவரெனலாம். இன்று உலகம் அமைதி இழந்துள்ளது. மனிதநேயம் மறைகிறது. நாம் என்று வாழாமல் நான் என்ற ஆணவம் முனைப்பு பெறுகிறது. 'உயிரின் மாண்பினை மதி, அன்றேல் அனைவருக்கும் அழிவு' என்ற குரல் வலுவிழந்துள்ளது. இருள் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் பிஞ்சு உள்ளங்களில் மனிதநேயம் என்ற விதையை ஊன்றினால் அது முளைத்து துளிர்த்து, மலர்ந்து, பழுத்து பாரெல்லாம் சமாதானம் நிலைக்கும்.

### சமூக சிற்பி

ஆசிரியர்களின் ஆளுமையை மதிப்பீடு செய்யும் சிறந்த நடுவர்கள் அவர்களின் மாணவர்களே என்றால் அது மிகையாகாது. மாணவர்களின் உள்ளக்கமலத்தில் உறைந்திருப்பது அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்கிய நல்லாசிரியர்களின் உருவங்களே என்றால் மாணவ உலகு அதனை ஏற்றுக் கொள்ளும். அதேவேளை ஆசிரியத்துவம் என்ற பண்பிற்கு ஏற்பத் தம் பணியினை நிறைவு செய்யாத இவர்களின் தழும்புகள் மறைய வாய்ப்பில்லை. ஆசிரியர்களின் உன்னத பணி உயிரூட்டல் அளிக்கக்கூடியதாக அரசும், சமூகமும் ஆசிரியர்களின் வாழ்க்கை நிலையினை மதிப்பீடு செய்து உரிய வேதனத்தையும் வழங்க வேண்டும். இதற்கு அறிஞர் அண்ணாவின் கூற்று கூடிய அழுத்தம் கொடுக்கிறது.

'இன்று ஆசிரியர் ஏங்கினால்,
நாளை நாடு ஏங்கும்,
இன்று ஆசிரியர்தூங்கினால்,
நாளை நாடு தூங்கும்'

சமூக சிற்பிகளான ஆசிரியர்களை நன்றிப் பெருக்குடன் வாழ்நாளெல்லாம் கௌரவித்தல் வேண்டும்.

### பேராசான்கள்


ஆசிரியர்களின் ஆளுமை விருத்திக்கு தளமாக அமைவது கல்வித்துவமாகும். ஆசிரியர் மாணவனை நவீன உலகிற்கு ஏற்ப ஆய்வு செய்து மாணவனின் கற்ற லுக்கு வழி காட்டுவதுடன் அவன் வாழ்வு துலங்கச் செய்வதிலே அவரது உந்துசக்தி நிறைந்த ஆளுமை (Dynamic Personality) பெரும் பங்கு வகிக்கிறது.

உலக இரட்சகராகிய இயேசு, நபி, புத்தர், கொன்பியூசியஸ், திருவள்ளுவர் முதலியோர் உலகம் உய்வதற்குத் தம்மை உருக்கி ஒளியேற்றிய பேராசான்கள் இன்றும் இவர்கள் அணையாத ஞான தீபங்களாகத் திகழுகிறார்கள். அவர்களின் அடிச் சுவட்டைப் பின்பற்றி ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் போது ஆசிரியரின் ஆளுமை செழுமைப்படும்.

'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்'

துரை. ஆரோக்கியதாசன்,
முன்னாள் பிரதி அதிபர்,
பலாலி ஆசிரியர் கலாசாலை

# நவீன எண் சோதிடம்




## எவ்வளவு துன்பதுயரம் வந்தாலும் தாங்கும் சக்தி பெற்றவர்கள் 64

### உடல் எண் 7 உயிர் எண் 8

7,16,25 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால், இவர்கள் கேது,சனி போன்ற அதிக்கத்தில் பிறந்த வராவர். இவர்கள் பார்ப்பதற்கு உயரமானவர்களாகவும், சிலர் குறைவான உயரத்துடனும் காட்சியளிப்பர். எவ்வளவு துயரம், துன்பம் வந்தாலும் தாங்கும் சக்தி பெற்றவர்கள். உழைத்து உயர்வுபெற நினைக்கும் இவர்களுக்கு அடிக்கடி வாழ்க்கையில் சோதனைகள் வருவதுண்டு. எதிர் நீச்சல் தான் நம் வாழ்க்கை என்பதை உணர்ந்து போராடி வெற்றிபெறச் சளைக்காது உழைப்பர். உரமேறிய உடம்பு என்பதைவிட உறுதியான இதயம் என்பது குறிப்பிடத்தக்கது.

தனிமையில் சில நேரங்களில் தன்னுடைய வாழ்க்கையில் நடந்து வரும் நிகழ்ச்சிகளைச் சிந்தித்து வேதனையுடன் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்வர். நல்ல குணம் படைத்த இவர்களுக்கு திடீரென்று சில சந்தர்ப்பங்களில் முரட்டுக் குணம் தோன்றிவிடும். இதனால் இவர்களுக்கு தீங்கு நேர்ந்து பின் ஒரு தவறைச் செய்ய மனம் இழுத்துக் கொண்டு செல்லும். உள்மனமோ ஏன் இதைச் செய்யப்போகிறாய்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

என்று திருப்பிக்கொண்டு வந்துவிடும். இப்படி மனப் போராட்டத்தில் தவிப்பர். பெயர் நன்றாக அமைந்தவர்கள் தனது முயற்சிகள் அனைத்தும் வெற்றியாக முடிவடைந்தாலும், நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள் நிறைந்த செல்வம் பெற்றதாலும் சிறப்புடன் வாழ்கின்றனர்.

ஆனால், பெயர் நன்றாக அமையாதவர்கள் ஆண்களாக இருந்தால் பெண்களாலும் பெண்களாக இருந்தால் ஆண்களாலும் பிரச்சினைக்கு உள்ளாகின்றார்கள். சிலருக்குத் திருமணமாகிப் பிரிவு ஏற்பட்டு விடுகின்றது. இன்னும் சிலர் திருமணமேயாகாது தனிமையில் வேதனைப்பட்டு இளமைவீணாகின்றதே என்று ஏங்குகின்றனர்.

பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்கள் முன்கோபிகளாக இருப்பதால் பலருடைய பகையும் உண்டாகின்றது. இதனால், இவர்கள் பிறருடன் பழகும் போது அளவோடு பழக வேண்டியது அவசியம். தன் மனதில் தோன்றுகின்ற கருத்துக்களை மறைத்து வைக்காது பகிரங்கமாக வெளியிடுவர். சில நேரங்களில் ஊமை போன்று அமைதியாக இருந்து விடுவர். இவர்களது மனம் எப்பொழுதும் நிலையானதாக இருக்கிறது. இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் வாழ்க்கையில் திருப்தி காண முடியாது அமைதியில்லாமல் உள்ளனர்.

இதே நேரத்தில் பெயர் தனது பிறந்த தேதிக்கு பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் உயர்ந்த முன்னேற்றம் பெற்று தொழில் அல்லது உத்தியோகம் செய்கின்றனர். அத்தோடு நல்ல ஆரோக்கியம், நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் அமையப்பெற்றுச் சிறப்புடன் வாழ்கின்றனர். சட்டம், சமயம், ஜோதிடம், மருத்துவம் போன்றவற்றில் ஆராய்ச்சியிருக்கும். பணம் ஈட்டுவதில் அதிகம் ஆர்வம் கொண்ட இவர்கள் பல்வேறு தொழில்கள் மூலம் பணம் ஈட்டுகின்றனர். தூரதேசப்பயணங்கள் செய்வதன் மூலமும் இயற்கைக்காட்சிகளான மலைப்பிரதேசங்களைக் கண்டு களிப்பதனாலும், நீர்வீழ்ச்சிகள், நீர்த்தேக்கங்களைக் காண்பதாலும் இவர்கள் மனம் அமைதி கொள்ளும். கலகலப்பாகப் பேசிப்பழகும் இவர்கள் திடீரென்று சிந்தனையில் மூழ்கிவிடுவர்.

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

பொதுவாக இவர்களுக்குப் பல்வேறு சோதனைகள் வந்தாலும் பெயர் பொருத்தமான நல்ல எண்களில் அமைத்து விட்டால் வாழ்க்கை சிறப்படையும். இதனால் வாசகர்கள் பெயரை நல்ல எண்களில் அமைத்துச் சிறப்படையலாம்.

**தொழில்**

இந்த எண்ணிக்கைக்காரர்கள் ஒப்பந்த வேலைகள், ஏஜென்சீஸ், கம்பியூட்டர், எலக்ட்ரானிக், மின்னியல், மருந்து. சாப்பாட்டுப் பொருட்கள் போன்றவற்றாலும் எழுத்துப் பேச்சு போன்றவற்றாலும் கல் சம்பந்தமான (மெற்றல்) அனைத்துத் தொழில்களாலும், வாகனத்தாலும் உயர்வடைவர்.

**நோய்**

இவர்களுக்கு வயிறு சம்பந்தமான கோளாறு, பல்வலி, நெஞ்சு வலி, முதுகு வலி, மூட்டு வலி, மனவியாதி போன்றவைகளும், இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி போன்றவைகளும் வரவாய்ப்பு இருப்பதால் சர்க்கரை, உப்பு போன்றவற்றை குறைத்துக் கொள்ளவும். வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் 42 எண் வருகின்ற மாதிரி பெயர் அமைத்துக் கொண்டால் நோயிலிருந்து விடுபடலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு சுக்கிரன், புதன் ஆதிக்கமான 15,24,33,42,51,60,69,14,23, 32,41,50,59,77 போன்ற எண்களில் பெயரை அமைத்துச் சிறப்படையலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-2,5,6

யோகமான தேதிகள்-2,11, 20,29,5,14,23,6,15,24

யோகமான மோதிரக்கல்-வைடுரியம், மூன்ஸ்டோன், டைகர்ஸ்ஐ

யோகமான நிறம்- பச்சை, நீலம், மஞ்சள்

ஆகாத தேதிகள்- 9,18,27,8, 17,26

ஆகாத நிறம்- கறுப்பு, சிவப்பு


### பெயர் எண்களின் பலன்

**95 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள் பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டு அதிலிருந்து தப்பிக்க முடியாது என்று பிறர் எண்ணுகின்ற நேரத்தில் அதிலிருந்து மீண்டும் மற்றவர்கள் பிரமிக்கும் படியான செயல்களைச் செய்தும் வெளிநாட்டுச் பொருட்களை விற்பதாலும் பிறரை மகிழ்விக்கும் கலைகளைச் செய்வதாலும் பொருளீட்டுவர்.

**96 எண் பலன்**

செவ்வாய் ஆகிய 9உம் சுக்கிரனாகிய 6உம் ஒன்று சேர்ந்து 96



வருவதால் தைரியமும் ஆடம்பரமான வாழ்க்கையும் பேரறிவும் அளிக்கவல்லது. தான் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் வெற்றியாகும். பேச்சாலும் கலையாலும் மற்றவர்களைக் கவரக் கூடிய காந்த சக்தியைக் கொடுக்கவல்லது. காமத்தை தூண்டக்கூடிய இந்த எண்ணை பெயராக உடையவர்கள் சிறிது நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். பொதுவாக இந்த எண் யோகமாதலால் விரும்பதக்கதே.

**97 எண் பலன்**


இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள் குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படும். ஆனால், 2,11, 20,29 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு மட்டும் பெரும் செல்வமும் புகழும் கிட்டும் வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களைப் பெற்ற இவர்களுக்கு சமயம், கலை போன்றவற்றில் மன நாட்டம் செல்லும். செயற்கரிய காரியத்தைச் செய்வதன் மூலம் பெரும் புகழும், வற்றாத செல்வமும் பெற்று வாழ்வர்.

**98 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்களுக்கு தன்னுடைய அறிவு தனக்குப் பயன் படவில்லையென்று வருந்துவர்.

சிறந்த அறிவாளியான இவர்கள் தனது வாழ்க்கையை சரிவர அமைத்துக் கொள்ள முடியாது தத்தளிப்பர். குடும்பத் தொல்லைகளும், பல்வேறு பிரச்சினைகளும், தீராத நோய்களும் வந்து இவர்களை வாட்டும். இந்த எண் வியாபார விலாசமாக வந்தால் கடன் கொடுத்தால் மீண்டும் வாங்க முடியாது.

(தொடரும்)





சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலை கைப்பணிப் பொருள் கண்காட்சி ஆரம்பநாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நிலைய நிறுவுநர் கு.மகாலிங்கம் மங்கள விளக்கேற்றி, ஆரம்பித்து வைப்பதனையும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தனுடன் இணைந்து முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா கண்காட்சியினை நாடாவை வெட்டி ஆரம்பித்து வைப்பதனையும் அருகில் நிலையத் தலைவர் இராசரத்தினம் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

# மட். பள்ளச் சேனையில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

நான்கு துப்பாக்கிகள், 4 அமுக்க வெடிக்கள், 3 மோட்டார் குண்டுகள், 38 ரக தோட்டாக்கள் 400 மற்றும் 9 மில்லி மீற்றர் தோட்டாக்கள் 15 மட்டக்களப்பு பள்ளச்சேனை பிரதேசத்தில் உள்ள காட்டு பகுதியில் புதைத்து மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையை அடுத்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதற்கமைய துப்பாக்கிகள், 4 அமுக்க வெடிக்கள், 3 மோட்டார் குண்டுகள், 38 ரக தோட்டாக்கள், 400 மற்றும் 9 மில்லி மீற்றர் தோட்டாக்கள் 15 என்பன மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-2)

# யதார்த்தமான இடதுசாரி கட்சியொன்று அவசியம்

## ஜே.வி.பி.தெரிவிப்பு

யதார்த்தமான இடதுசாரி கட்சியொன்றின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளது என ஜே.வி.பி. கிளர்ச்சி குழு சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் மத்திய செயற்குழு உறுப்பினருமான ஓபாத எனப்படும் சேனாதீர குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இடதுசாரி கொள்கைகளை பிரசாரம் செய்யும் நோக்கில் பாரிய பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச ரீதியிலும் இலங்கையிலும் யதார்த்தமான இடதுசாரி கட்சியொன்றின் அவசியம் வெகுவாக எழுந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய ஜே.வி.பி. வலதுசாரி கொள்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த 12 ஆண்டுகளாக கட்சிக்குள் வலதுசாரி மற்றும் இடதுசாரி கொள்கைகள் பற்றிய முரண்பாடுகள் நீடித்து வந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் மூலம் இந்த முரண்பாடுகளுக்கு இனியும் தீர்வு காண முடியாது எனவும் இதனால் யதார்த்தமான இடதுசாரி கோட்பாடுகளை உடைய கட்சியொன் றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

துரித கதியில் கட்சியொன்றை பதிவு செய்வதனை விடவும் இடதுசாரி கொள்கைகளின் அவசியத்தை இந்த நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துவதே மிகவும் அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் பெயரையோ இலச்சினையோ அல்லது தலைமையகத்தை பாதுகாப்பாதற்காக போராட்டம் நடத்துவதில் அர்த்தமில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜே.வி.பி. பிளவிற்கு றோ மற்றும் சீ.ஐ.ஏ உளவுப் பிரிவுகளே காரணம் என்ற கருத்துக்கள் அடிப்படையற்றவை என அவர் தெரிவித்துள்ளார்.

கட்சி முரண்பாடு தொடர்பான பிரச்சினையை திசை திருப்பும் நோக்கில் ஜே.வி.பி.தலைமை இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின்பிரிவினைவாத போராட்டத்துடன் ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களை தொடர்புபடுத்த முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார். சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இலங்கை மீது ஆதிக்கம் செலுத்த முயற்சி செய்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (4-2)

# வியட்நாம் ஜனாதிபதி இலங்கை வருகை

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வியட்நாம் ஜனாதிபதி டரொன்க் டெரன்க் சென்க் இலங்கை வரவுள்ளார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கை வரும் ஜனாதிபதி சென்க்குடன் வியட்நாம் வர்த்தக குழுவினரும் வரவுள்ளனர்.

இவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து 'கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.10 06

- ★ 1683-வில்லியம் பென் தன்னுடன் 13 ஜேர்மனியக் குடும்பங்களை பென்சில்வேனியாவுக்கு அழைத்து வந்து குடியேற்றினார்.
- ★ 1847-சாமுவேல் பிஸ்கிறீன் பருத்தித் துறையை வந்தடைந்தார்.
- ★ 1854-இங்கிலாந்தில் நியூகாசில் மற்றும் கேற்ஸ்ஹெட் நகரங்களில் பரவிய பெருத் தீயில் 54 பேர் கொல்லப்பட்டு நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.
- ★ 1870-ரோம் இத்தாலியின் தலைநகரானது.
- ★ 1889-தான்சானியாவின் கிளிமஞ்சாரோ மலையின் உச்சி முதன்முதலில் எட்டப்பட்டது.
- ★ 1889-தோமஸ் அல்வா எடிசன் தனது முதலாவது அசையும் படத்தைக் காண்பித்தார்.
- ★ 1890-யாழ்ப்பாண நகரில் சின்னக்கடை எனப்படும் முக்கிய சந்தையில் கடைத்தொகுதி ஒன்று இடிந்து வீழ்ந்ததில் பலர் கொல்லப்பட்டுப் பலர் படுகாயமடைந்தனர்.
- ★ 1908-ஆஸ்திரியா தன்னுடன் பொஸ்னியா ஹெர்செகோவினாவை இணைத்துக் கொண்டது.
- ★ 1927-முதலாவது பேசும் படம் த ஜாஸ் சிங்கர் வெளியானது.
- ★ 1966-எல்.எஸ்.டி ஐக்கிய அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.
- ★ 1973-80 ஆயிரம் எகிப்தியப் படைகள் சூயஸ் கால்வாயைக் கடந்து இஸ்ரேலிய பார் லேவ் கோட்டை அழித்து யொம் கிப்புர் போரை ஆரம்பித்தனர்.
- ★ 1976-பார்ப்டோசில் இருந்து புறப்பட்ட கியூபா விமானம் ஒன்று பிடெல்காஸ்ட்ரோவுக்கெதிரான தீவிரவாதிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதில் 73 பேர் உயிரிழந்தனர்.
- ★ 1987-பிஜி குடியரசாகியது.
- ★ 1995-சூரியனுக்கு அடுத்ததாக கோளைத் தன்னகத்தே கொண்ட பெரும் விண்மீன் 51 பெகாசி கண்டறியப்பட்டது.
- ★ 2000-யுகோஸ்லாவியா ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசெவிக் இராஜினாமா செய்தார்.
- ★ 2002-பிரெஞ்சு எண்ணெய்த் தாங்கி ஜேர்மனில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.
- ★ 2010-தமிழ் விக்கிபீடியாவில் 25 ஆயிரம் கட்டுரை இலக்கு எட்டப்பட்டது.

### பிறப்புக்கள்

- ★ 1887-லெ கொபூசியே, கட்டடக் கலைஞர் (இ.1965)
- ★ 1982-சிபிராஜ், தமிழ்த் திரைப்பட நடிகர்
- ★ 1982- எம்.சிலார்ஸ், அமெரிக்க ஹிப்-ஹோப் கலைஞர்
- ★ 1982-மைகேல் அர்டேன், அமெரிக்க நடிகர்
- ★ 1982-வில்லியம் பட்லர், இசை கலைஞர்
- ★ 1984-மோர்னே மோர்கெல், தென் ஆபிரிக்க துடுப்பாட்ட வீரர்
- ★ 1985-சில்வியா போவ்லேஸ், அமெரிக்க கூடைப்பந்து வீராங்கனை
- ★ 1986-தெரேசா கேர்நட்லோவ், செக் குடியரசு பாடகி

### இறப்புக்கள்

- ★ 1892-அல்பிரேட் லார்ட் டென்னிசன், ஆங்கிலேய கவிஞர் (பி. 1809)
- ★ 1905-பேர்டினண்ட் வொன் ரிச்தோஃபென், ஜேர்மனிய புவியியலாளர் (பி.1833)
- ★ 1981-அன்வர் சதாத், எகிப்திய ஜனாதிபதி, நோபல் பரிசு பெற்றவர் (பி.1918)
- ★ 2007-லக்சுமி மால் சிங்குவி, இந்திய சட்ட வல்லுநர் மற்றும் எழுத்தாளர் (பி. 1931)

# புதியரக நெல்லை கொள்வனவு செய்வது தொடர்பில் கவனம்

## வர்த்தக அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய ரக விதை நெல்லை செய்கையிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிடுகின்றது.

குறிப்பாக நீளமான நெல் வகைகளை செய்கையிடுவது தொடர்பில் விவசாயிகள் மத்தியில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்து விவசாய் அமைச்சுடன் கலந்துரையாடி வருவதாக அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன கூறினார்.

சர்வதேச சந்தையில் இத்தகைய நெல்லினால் உற்பத்தி செய்யப்படும் அரிசி வகைகளுக்கு அதிகளவு கேள்வி நிலவுவதாக அவர் தெரிவித்தார்.

அரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன்ஊடாக வெளிநாட்டு செலவாணியை பெற்றுக்கொள்ள முடியும் என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது அரசாங்கத்தின் களஞ்சியசாலைகளில் இரண்டு இலட்சம் மெற்றிக்தொன் நெல் கையிருப்பில் உள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார். (4-2)

# புத்தர் சிலையை விற்பனை செய்ய முயன்ற நபர்கள் கைது

(கொழும்பு)

6 கோடி ரூபா பெறுமதியான புராதன புத்தர் சிலையொன்றை விற்பனை செய்ய முயன்ற இருவரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அச்சிலையையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த முன்னாள் கான்ஸ்டபிள் ஆவார்.

உலோககத்தாலான 48 கிலோகிராம் எடையுள்ள இந்த சிலையை வாங்குவதற்கு விரும்பும் ஒரு தரப்பாக தம்மைக் காட்டிக் கொண்டே விசேட பொலிஸ் குழுவொன்று சந்தேக நபர்களை கைது செய்துள்ளது.

இந்த பேரத்தை முடிப்பதற்காகதம்புள்ளையிலுள்ள உல்லாச ஹோட்டலொன்றுக்கு அருகில் வருமாறு சந்தேகநபர்கள் அழைக்கப்பட்ட பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.கே. ஞானசிறியின் நெறிப்படுத்தலின் கீழ் தம்புள்ளை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சந்தேக நபர்களுக்கு இந்த சிலை எப்படி கிடைத்தது என்பது இதுவரை அறியப்படவில்லை. தடுப்பு காவல் உத்தரவின் கீழ் சந்தேக நபர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.(4-2)

# ரணில் தனது பதவியை தக்கவைக்கவே முயற்சி செய்து வருகின்றார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தனது தலைமைத்துவத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தேர்தல்களில் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ள செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

சிதறிப் போயுள்ள எதிர்க்கட்சியை ஒன்றிணைக்க ரணில் விக்ரமசிங்க முனைவதாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். நடைபெறவுள்ள தேர்தலில் அரசாங்கம் பாரிய வெற்றியைப் பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (4-9)

# துணுக்காய் பிரதேச அபிவிருத்தி கூட்டம்

(முல்லைத்தீவு)

துணுக்காய் பிரதேச மட்ட அபிவிருத்தி இணைப்புக்கூட்டம் நேற்று புதன்கிழமை காலை 10 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் இவ்வாண்டிற்கான அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. மக்கள் தமது தேவைகளை முன்வைத்தனர்.

அத்தேவைகளில் தமக்கு வீட்டு வசதிகள் பெற்றுத்தருமாறும் குடிநீர்,மின்சாரம், மலசலகூடம் ஆகிய ஏனைய வசதிகளைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு வரட்சியான இக்காலங்களில் நீர்ப்பிரச்சினையை முன்வைத்தனர்.மேலும் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மின்சார இணைப்பு வழங்குவதாக கூறப்பட்டது. ஆனால் இதுவரை எமக்கு மின்சார வசதிகளை பெற்றுத்தரவில்லையெனவும் மக்கள் இக்கூட்டத்தில் விசனம் தெரிவித்தனர்.

எனவே இத்தேவையையும் தாம் அரச அதிபரூடாக உரிய தரப்பினரிடம் கூறி பெற்றுத்தருவதாக பிரதேச செயலர் உறுதியளித்தார்.

அத்தோடு வவுனியா ஆர்.டி. எஸ்.நிறுவனத்தினர், கல்விளான், ஐயங்குளம் ஆகிய கிராமங்களுக்கு மின்சார வசதியைப் பெற்றுத் தரமுன்வந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார். (4-3)

# மொழித் தேர்ச்சி பரீட்சைக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

எதிர்வரும் 15,16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கொரிய மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் பொலிஸாருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கு அமைய இந்த பாதுகாப்புதிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய பரீட்சை நடைபெறும் 600 பொலிஸ் அதிகாரிகளை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4-2)

# சமூகம் இன்று முழுமையாக சிதைவடைந்து செல்கின்றது

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச நிர்வாக கட்டமைப்பின் மீது மக்கள் நம்பிக்கையிழந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

நுகேகொடை-நாவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி சார்ப்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் வகையில் இந்த மக்கள் சந்திப்பு இடம்பெற்றது.

சமூகம் இன்று மழுமையாக சிதைவடைந்து சென்றுள்ளதாக குறிப்பிட்ட எதிர்கட்சித் தலைவர் பொலிஸ் காவலில் உள்ள போதே மனிதர்கள் கொலை செய்யப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பொலிஸ் நிலையத்திற்குத் தீ வைத்து பொலிஸாரைக் கொலை செய்வதாகவும் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு அவர்களைக் கொலை செய்வதாகவும் ரணில் விக்மைசிங்க தெரிவித்துள்ளார்.

ஏன் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன என இதன் போது கேள்வியெழுப்பிய அவர் சட்டத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை எனவம் அரசாங்கம் நிர்வாகக் கூட்டமைப்பு மீது மக்களுக்குள்ள நம்பிக்கை இழக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.(4-2)

# இலங்கையின் சமாதானத்திற்கு ஆஸ்திரியா உதவி வழங்கும்


(கொழும்பு)

இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் சமாதானத்தை வலுப்படுத்துவதற்கும் தேவையான உதவியை வழங்குவதாக ஆஸ்திரிய ஜனாதிபதி கலாநிதி ஹெய்ன்ஸ் பிஸ்சர் புதிதாக நியமிக்கப்பட்ட தூதுவர் ஏ.எல்.அஸீஸ் ஊடாக தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

ஆஸ்திரியாவுக்கான இலங்கை தூதுவராக புதிதாக நியமிக்கப்பட்ட ஏ.எல்.அஸீஸ் தனது நியமனக் கடிதத்தினை ஆஸ்திரிய ஜனாதிபதி கலாநிதி ஹேய்ன்ஸ் பிஸ்சரிடம் கையளித்த பின்னர் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இலங்கையில் மேற்கொள்ளப்படும் பொருளாதார அபிவிருத்தி, சமாதானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஆஸ்திரிய ஜனாதிபதிக்கு தூதுவர் அஸீஸ் விளக்கியுள்ளார்.

தூதுவர் அஸீஸ் ஆஸ்திரியாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களின் வதிவிட பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-2)


யாழ்.மத்தியகல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கணனிக்கூடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது .இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாணவர்களின் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்து வரப்படுவதையும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாகணனிக் கூடத்தை நாடாவெட்டி திறந்து வைப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

# தி.மு.க.வும் கம்யூனிஸ்ட்டும் எதிரெதிர் கட்சிகள் அல்ல



(சென்னை)

கம்யூனிஸ்டும் தி.மு.கவும் எதிரெதிர் துருவங்கள் அல்ல என்று கருணாநிதி கடிதம் எழுதியுள்ளார்.

தி.மு.க.வும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டும் அடிப்படையில் எதிரெதிர் துருவத்தில் இருக்க வேண்டிய இயக்கங்கள் அல்ல என்று கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், என் விருப்பத்தை வெளியிடுகிறேன் என்ற தலைப்பில் கருணாநிதி கடந்த செவ்வாய்க் கிழமை கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

சிதம்பரம் பொதுக்கூட்டத்தில் பேசிய மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட்டும் கொள்கை ரீதியாக மாறுபட்ட இயக்கங்கள் இல்லை.

பெரியாரையும் அண்ணாவையும் என் வாழ்வில் சந்திக்காமல் இருந்தாலும் நான் ஒரு கம்யூனிஸ்ட்டாகத்தான் இருந்திருப்பேன் என்று பலமுறை கூறியிருக்கிறேன்.

தமிழ் நாட்டில் குடிசைகளே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காக வீடு வழங்கும் திட்டம் மே தினத்துக்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறை சென்னையில் மேதின பூங்கா மீனவர்களுக்குச் இலவச வீட்டு வசதித் திட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை சட்டம், விவசாயிகளிடம் விளை பொருட்கள் நேரடி கொள்முதல், பெரியார் நினைவு சமத்துபுரத் திட்டம், அமைப்புசாரா தொழி லாளர் அனைவருக்கும் பல்வேறு நல வாரியங்கள் அனைத்துச் சாதியினரும் அர்ச்ச கராகச் சட்டம், சமச்சீர் கல்வி என மார்க்சிஸ்டுக்கு உடன்பாடான பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அப்படியிருக்கையில் எதற்காக தி.மு. கவை படுதோல்வி அடைய செய்ய வேண்டுமென்று ஜி. ராமகிருஷ்ணன் ஆசைப்படுகிறார். ஆனால் இதை மார்க்சிஸ்ட் கட்சியின் மற்ற தோழர்கள் ஏற்கமாட்டார்கள் என்பது உறுதி.

அவ்வப்போது நடைபெறும் தேர்தல்களில் உறவுகள், உடன்பாடுகள் வராமல் போகலாம். ஒரு தேர்தலில் தனித்தனி அணியில் இருக்கலாம். மற்றொரு தேர்தலில் ஒரே அணியில் இருக்கலாம்.

தி.மு.கவை மார்க்சிஸ்ட்டும் அடிப்படையில் எதிரெதிர் முகாமில் இருக்க வேண்டியது கட்சிகள் அல்ல என்பதையும் தேர்தலில் ஓரிரு இடங்களில் பெறும் வெற்றி பெரிதல்ல என்பதையும் மனதில் கொண்டு ராமகிருஷ்ணன் இனிமேல் கருத்துகளைத் தெரிவிப்பது நல்லது என்பதே என் விருப்பம் என்று கருணாநிதி கூறியுள்ளார். (4-2)

## தாஜ்மகால் இன்னும் ஐந்து ஆண்டுகளில் இடிந்து விழும்

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால் இன்னும் ஐந்து ஆண்டுகளில் இடிந்து விழும் அபாயம் உள்ளதாக நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். 358 ஆண்டுகால பழைமை வாய்ந்த சலவைக்கல் சமாதியை (தாஜ்மகால்) பார்வையிட ஆண்டுதோறும் ஆக்ராவிற்கு நான்கு மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

யமுனை நதி நாளுக்கு நாள் மாசுபடுத்தலும் தொழிற்சாலைப் பெருக்கமும் காடுகள் அழிப்பு தாஜ்மகாலை அழித்து விடும் என்று விழிப்புணர்வு ஆர்வலர்கள் எச்சரித்துள்ளனர். மேலும் சமாதியில் விரிசல் ஏற்பட்டு வருவதாகவும் கடந்த ஆண்டே தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும் அடிக்கட்டுமானம் மேலும் தளர்ந்து வருகின்றது அது மிகவும் பலவீனமாக உள்ளது. (4-2)

# மசோதாவை நிறைவேற்றாவிட்டால் காங்கிரஸிற்கு எதிராக போராட்டம்

## ஹசாரே எச்சரிக்கை

(ராலேகான் சிற்றி)

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத் தொடரில் ஜனலோக்பால் மசோதாவை நிறைவேற்றாவிட்டால் 5 மாநில பேரவைத் தேர்தலில் காங்கிரஸுக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபடுவேன் என சமூக சேவகர் அன்னா ஹசாரே தெரிவித்துள்ளார்.

அவரது சொந்த கிராமமான ராலேகான் சிற்றியில் செய்தியாளர்களிடம் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் கூறியதாவது,

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத் தொடரில் ஜனலோக்பால் மசோதாவை நிறைவேற்ற வேண்டும். இல்லையென்றால் அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள உத்தரப் பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், கோவா மணிப்பூர் மாநிலங்களில் காங்கிரஸுக்கு எதிராகப் பிரசாரத்தில் ஈடுபடுவேன். அதற்கு முன்னோட்டமாக ஹரியாணவில் ஹுசார் மக்களவை இடைத் தேர்தலில் காங்கிரஸுக்கு வாக்களிக்காதீர்கள் என பிரசாரம் செய்ய உள்ளேன். ஹுசார் மக்களவைத் தொகுதிக்கு எதிர்வரும் 13 இல் இடைத் தேர்தல் நடைபெற உள்ளது. ஜனலோக்பால் மசோதா நிறைவேற்றப் படாவிட்டால் உத்தரப் பிரதேசத்தில் தேர்தல் நாளுக்கு முன் 3 நாட்கள் உண்ணாவிரதம் மேற் கொள்வேன்.

ஜனலோக்பால் மசோதாவுக்கு ஆதரவாக பாரதிய ஜனதா கட்சித் தலைவர் நிதின் கட்காரி எனக்கு கடிதம் எழுதியுள்ளார். இன்னும் ஓரிரு நாட்களில் காங்கிரஸ் தரப்பிலிருந்து உறுதி மொழிக் கடிதம் வரவில்லை என்றால் பிரசாரத்தை தொடங்குவேன்.

என்னை சிறைக்கு அனுப்பிய காங்கிரஸை எதிர்ப்பேன். எந்தவொரு குறிப்பிட்ட வேட்பாளருக்கும் ஆதரவாகப் பிரசாரம் செய்ய மாட்டேன். தூய்மையான வேட்பாளருக்கு வாக்களியுங்கள் என்றே கோருவேன் .

காங்கிரஸ் வேட்பாளர் தூய்மையாக இருந்தாலும்பயனில்லை. கட்சி சரியில்லாத போது வேட்பாளர் தூய்மையாக இருந்து என்ன பயன்? பிரதமர் மன்மோகன்சிங் தூய்மையானவர் இல்லையா? ஆனால் அவர் ஆட்டுவிக்கப்படுபவராகத்தானே உள்ளார்.

விசாரணையை மன்மோகன் சந்திக்க வேண்டும். 2ஜி விவகாரத்தில் பிரதமர் மன்மோகன்சிங் எந்தத் தவறும் செய்திருக்க வாய்ப்பில்லை. அப்படியிருக்கையில் அவர் விசாரணையை எதிர்கொள்வதில் தயங்கக் கூடாது. விசாரணையின் முடிவில் அவர் தூய்மையானவர் என்பது நிரூபணமானால் அவருக்குத்தான் அது நன்மைபயப்பதாக அமையும்.பா.ஜ.க ஆதரவாளரா? நான் என் வாழ் நாளில் ஆர்.எஸ்.எஸ் அல்லது பா.ஜ.க வின் எந்தவொரு கூட்டத்திலும் கலந்து கொண்டதில்லை. என்னை பா.ஜ.க ஆதரவாளர் என்று கூறுபவர்களை மனநல வைத்தியசாலைக்குத்தான் அனுப்ப வேண்டும்.

குஜராத்தில் ஐ.பி.எஸ். அதிகாரி சஞ்சீவ்பட்டை கைது செய்தது தவறு. உச்ச நீதிமன்றத்தில் சஞ்சீவ் பட், பிரணாப் பத்திரம் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் அவரைக் கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன?, அவரைக் கைது செய்தது தவறான நடவடிக்கையா கும் என்றார். (4-2

# பாரதச் செய்திகள்

# ஆப்கானிஸ்தானுடனான உறவு திறந்த புத்தகம் போன்றது

## மன்மோகன் தெரிவிப்பு

ஆப்கானிஸ்தானுடனான இந்தியாவின் நட்பு திறந்த புத்தகம் போன்றது என பிரதமர் மன்மோகன் சிங் கூறினார். ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் இரண்டு நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் இந்தியா வந்துள்ளார்.



நேற்று முன்தினம் மாலை பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்துப் பேசினார். அப்போது இரண்டு வகையிலான நாடுகளுக்கு இடையேயான பரஸ்பர உறவை வலுப்படுத்தும் வகையிலான மூன்று முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. இதன்பின் இருவரும் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

பிரதமர் மன்மோகன் சிங் கூறுகையில், ஆப்கானிஸ்தான் அமைதியான பயணத்துக்கு இந்தியா தான் முழு ஆதரைவயும் அளிக்கும். வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களின் இடையூறு எதுவும் இன்றி அமைதியாக வாழ்வதற்கான அனைத்து உரிமையும் ஆப்கானிஸ்தான் மக்களுக்கு உண்டு. ஆப்கானிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவு என்பது திறந்து வைத்த புத்தகம் போன்றது. அனைவருக்கும் இதுகுறித்துத் தெரியும். தெற்காசிய பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை ஒழிக்க ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் என்றார்.

ஆப்கான் ஜனாதிபதி கர்சாய் கூறுகையில், ஆப்கானிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான நட்பு மிகவும் பழைமைவாய்ந்தது. தெற்காசிய பிராந்தியம் பயங்கரவாதத்தாலும் பழைமைவாதத்தாலும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது. இந்த நாடுகளில் வசிக்கும் அப்பாவி மக்கள் பயங்கரவாதத்துக்குப் பலியாகின்றனர் என்றார்.

பயங்கரவாதம், பழைமைவாதம் ஆகிய விடயங்களில் பாகிஸ்தான் இரட்டை வேடம் போடுவதாக ஆப்கானிஸ்தானும் இந்தியாவும் ஏற்கனவே குற்றம்சாட்டி வருகின்றன.

ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி ரப்பானி கொல்லப்பட்ட விடயத்தில் பாகிஸ்தானுக்கு தொடர்பு உள்ளதாக ஆப்கான் புலனாய்வு அமைப்புகள் தெரிவித்திருந்தன. (4-2)



நாடு முழுவதும் யாத்திரை மேற்கொண்டுள்ள பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் அத்வானிக்கு டில்லியில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந் நிகழ்ச்சியில் ஆதரவாளர் அத்வானிக்கு பொன்னாடை போர்த்தி வீரவாளை பரிசளித்து வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# அடுத்த தடவையும் ஜனாதிபதியாவது சந்தேகமானதே- பராக் ஒபாமா



இரண்டாவது முறையாக ஜனாபதிபதியாவது சந்தேகமானதேதான் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார். அண்மையில் நடத்திய ஆய்வு முடிபும் இதையே பிரதிபலிக்கிறது. ஜனநாயக கட்சியைச் சேர்ந்த பராக் ஒபாமா கடந்த 2009 ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். முதல் கறுப்பின ஜனாதிபதி என்ற பெருமையும் கிடைத்தது. 4 ஆண்டுகளைக் கொண்ட இவரது பதவிக் காலம் அடுத்த ஆண்டுடன் முடிகிறது. இதையடுத்து அடுத்த ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 2012 நவம்பரில் நடைபெறுகிறது. இதில் மீண்டும் போட்டியிட ஒபாமா விரும்புகிறார். இது தொடர்பாக முன்னணி நாளிதழ்கள் ஒரு ஆய்வு நடத்தின. அதில் ஒபாமா மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவார் என 37 சதவீதம் பேர் மட்டுமே தெரிவித்தனர்.

எதிர்க்கட்சியான குடியரசு கட்சியைச் சேர்ந்தவர் ஜனாதிபதியாவார் என 55 சதவீதம் பேர் தெரிவித்தனர். இது குறித்து ஒபாமாவிடம் கேட்டபோது சர்வதேச நிதி நெருக்கடி காரணமாக வேலையின்மை 9 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவாகும். எனவே 2 -வது முறை தாம் ஜனாதிபதியாவது சந்தேகம்தான் என ஒப்புக் கொண்டார். (4-2)

# கடல் மட்டத்தின் உயர்வை அவசரமாக கவனிக்க வேண்டும்

## பான் கீ மூன் தெரிவிப்பு



கடல் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் வரும் ஆண்டுகளில் கொல்கத்தா முதல் மியாமி வரையிலான கடலுக்கு அருகில் உள்ள பகுதிகள் பெரும் ஆபத்துக்கு உள்ளாக நேரிடும் என்று பான் கீ மூன் எச்சரித்துள்ளார்.

பருவகால மாற்றங்களால் உருவாகியிருக்கும் இந்த ஆபத்தை எதிர்கொள்ள சம்பந்தப்பட்ட நாடுகள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் தனது செய்தி ஒன்றில் கேட்டுக்கொண்டார்.

பான் கீ மூன் தனது செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது, கடல் மட்டத்தில் இருந்து ஒரு மீற்றர் இடைவெளியில் உலகம் முழுவதும் 6 கோடி பேர் வசிக்கின்றனர். இந்த நூற்றாண்டின் முடிவில் இந்த மக்கள் தொகை 13 கோடியாக உயரும்.

இந்த நிலையில் கடல்மட்ட உயர்வு என்பது அவசரமாக கவனிக்க வேண்டியதாகிறது. கடலுக்கு அருகில் இருக்கும் முக்கிய நகரங்களான கெய்ரோ,நியூயோர்க், கராச்சி, கொல்கத்தா , பெலம் ,நியூஆர்லியன்ஸ், ஷங்காய், டோக்கியோ, லாகோஸ்,மியாமி, ஆம்ஸ்டர்டாம் ஆகியன புயல்காற்றுக்கு அடிக்கடி ஆளாக வேண்டியிருக்கும்.

நகர்மயமாதலுக்கும் பருவகால மாற்றத்திற்கும் இடையே உள்ள தொடர்பு உண்மைதான்.எதிர்வரும் 2050 க்குள் உலக மக்கள் தொகை 1999 ஆம் ஆண்டை விட 50 சதவீதம் அதிரிக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

எதிர்வரும் 2050ஆண்டு வாக்கில் சுமார் 20 கோடி பேர் பருவகால மாற்றம் தொடர்பான காரணங்களால் தங்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருப் பார்கள்.

எந்த நகரங்கள் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளனவோ அவைதாம் பருவகால மாற்ற ஆபத்திலிருந்து விடுபடுவதற்கான வழிகளை காண வேண்டும்.காற்று, சூரியஒளி, பசுமை வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு சர்வதேச ஆதரவும் உள்நாட்டு ஆதரவும் அவசியம். (4-2)

# தாய்வான் சரக்குக்கப்பல் கடலில் மூழ்கியது- 6 பேர் பலி

பனாமா நாட்டை சேர்ந்த சரக்குக் கப்பல் புயலில் சிக்கி இரண்டாக உடைந்து கடலில் மூழ்கியதில் 6 பேர் பலியாகினர். மேலும் 4 பேரை காணவில்லை. பனாமா நாட்டை சேர்ந்த ஜுவய் சிங் என்ற சரக்கு கப்பல் 21 கப்பல் பணியாளர்களுடன் சென்றது.

தாய்வான் நாட்டிலுள்ள கீலூங் துறை முகத்தில் இருந்து 11ஆயிரத்து 500 தொன் சரக்குகளுடன் கடலில் சென்றது. அடுத்த 90 ஆவது நிமிடத்தில் கடலில் வீசிய புயலில் சிக்கி கப்பல் அப்பகுதியில் இருந்து பாறையில் மோதி 2 துண்டாக பிளந்து கடலில் மூழ்கியது.

விபத்து குறித்து தகவல் அறிந்ததும் ஹெலிகொப்டர் மற்றும் படகுகள் மூலம் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இதில் 6 பேர் பலியாகினர். 11 பேர் காப்பாற்றப்பட்டு முதலுதவி அளிக்கப்பட்டது. மேலும் காணாமல் போன 4 பேரை மீட்புக் குழுவினர் தேடி வருகின்றனர். இதில் 3 கப்பல் பணியாளர்கள் வெளிநாடுகளை சேர்ந்தவர்கள்.

இந்த கப்பலில் ஏற்றப்பட்டிருந்த 315.5 தொன் கச்ச எண்ணெய் கடலில் கலந்துள்ளதால் மீட்புப் பணிகளில் துரிதமாக செயற்பட முடியவில்லை.

மேலும் கடல் நீர் கடுமையாக மாசுபட்டுள்ளது. கடலில் எண்ணெய் பரவலை தடுக்க எண்ணெய் உள்வாங்கி அட்டைகள் (அப்சர்வன்ட் சீட்) ஆங்காங்கே மிதக்க விடப்பட்டுள்ளன. மேலும் எண்ணெய் கசிவை கண்டுபிடிக்க ரேடார் மூலம் கண்டுபிடிப்பு கருவியை பயன்படுத்தி வருகின்றனர். (4-2)

# பூமியை நோக்கி இன்னொரு செயற்கைக்கோள் பாய்கிறது

செயலிழந்த மற்றொரு செயற்கைக் கோள் பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அமெரிக்க விண்வெளி மையத்தால் அனுப்பி வைக்கப்பட்டு செயலிழந்த யு ஏ ஆர் எஸ் செயற்கைக்கோள் 26 துண்டுகளாக உடைந்து அண்மையில் கடல் பகுதியில் விழுந்ததால் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இந்நிலையில் ரோசாட் என்ற மற்றொரு செயற்கைக்கோள் பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாகவும் 30 துண்டுகளாக உடைந்து பூமியில் விழும்போது மனிதர்கள் மீது விழ 2000 இல் ஒரு பங்கு வாய்ப்பு இருப்பதாகவும் ஜேர்மனி விண்வெளி ஆய்வு மைய விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

ரோசாட் செயற்கைக்கோள் ஜேர்மனி, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியில் கடந்த 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதலாம் திகதி அமெரிக்காவால் விண்ணுக்கு ஏவப்பட்டது.இதன் பணி 1999 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி முடிவடைந்தது. இதையடுத்து செயலிழக்க வைக்கப்பட்ட இது பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. (4-2)



உனது திறமை ஒன்று என்றாலும் அதனை ஒளித்து வைப்பது உன்னையே ஒழிப்பதற்கு சமனாகும். - மில்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இனங்கண்டு கொள்வதில் தமிழ் மக்கள் மிகவும் பலவீனமானவர்கள்

'உன்னையே நீ அறிவாய்' என்ற தத்துவம் மிகவும் முக்கியமானது. முதலில் என்னை நான் அறியும் பக்குவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

என்னை நான் அறிதல் என்பது என்னிடம் உள்ள பலம், பலவீனம் உள்ளிட்டவற்றை அறிதலாகும்.

என்னை நான் அறிந்துகொள்ளாதவரை எனது துன்பத்தை எவராலும் நீக்கமுடியாது என்பது நம் நிலைப்பாடு.

இந்த வகையில் ஈழத் தமிழ் இனம் தன் பற்றிய சுயமதிப்பீட்டை ஒதுபோதும் செய்யவில்லை.

தமிழ் மக்கள் பற்றிய சுயமதிப்பீடுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமே மேற்கொண்டிருக்க வேண்டுமாயினும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அந்தப் பாரிய பொறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை.

இதற்கு எங்களை நீண்டகாலமாக மிரட்டி வரும் மரண பயம் முதன்மைக் காரணமாகும்.

இது தவிர போட்டி, பொறாமை, காட்டிக் கொடுத்தல், எதற்கெடுத்தாலும் எதிர்மறையான விமர்சனம், குற்றம்சாட்டும் மனப்பாங்கு, எதனையும் தீர விசாரித்தறியாமல் அது பற்றிய கருத்துக்களை வெளியிடுதல் என்ற துணைக் காரணங்கள் எங்கள் இனத்தின் மோசமான நிலைக்கு உதவிற்று.

இவை தவிர ஈழத்தமிழினத்திடம் மிகப் பெரிதொரு பலவீனம் உண்டு. அது இனங்காணத் தெரியாமையாகும்.

'இனங்காணுதல்' என்பது ஒருவரின் வாழ்வின் வெற்றிக்கு மிகவும் அவசியமானதாகும். ஆனால் அது விடயத்தில் ஒட்டுமொத்த ஈழத்தமிழ் இனம் மிகவும் பலவீனமாக இருக்கிறது.

இதன் காரணமாகவே எத்தனையோ சாதகமான சந்தர்ப்பங்கள் எமக்குக் கிடைத்தும் எங்கள் இனத்தால் மீட்சி பெறமுடியவில்லை.

இது விடயத்தில் கற்றவர்கள், புத்திஜீவிகள் அசமந்தமாக அல்லது எங்கள் அலுவல் நடந்தால் அது போதும் என்ற நினைப்பில் இருந்தமையால், இனங்காணும் பலவீனத்தில் கடுமையாக மூழ்கிப் போயுள்ளோம். எனவே இது விடயத்தில், கல்வியாளர்களும், புத்திஜீவிகளும் இனப்பற்றோடு எங்கள் மக்களுக்கு இனங்காணும் நுட்பத்தை உதாரணங்களுடன் ஒப்பிட்டுக்காட்டுதல்களுடன் வெளிப்படுத்த முன்வருதல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா நடைபெறும் இன்றைய தினத்தில் இக் கோரிக்கையை முன்வைப்பது பொருத்தமெனக் கருதுகிறோம்.

# ஏ 9 வீதியில் விபத்து நடத்துநர் பலியானார்

(யாழ்ப்பாணம்)

வவுனியா ஏ 9 வீதியில் நேற்று அதிகாலை வேளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் பேருந்து நடத்துநர் சம்பவ இடத்திலேயே பலியானர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த சொகுசு பேருந்து ஒன்று; யாழ்ப்பாணத்திற்கு ஓடுகளை ஏற்றி சென்ற சிறிய ரக டிப்பர் ரக வாகனத்துடன் மோதியதாலேயே இந்த விபத்து சம்பவித்தது. இதன்போது டிப்பர் ரக வாகனமும் பேருந்தும் சேதமடைந்துள்ளன.

பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை இந்த விபத்து சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற மற்றும்மொரு விபத்து சம்பவத்தில் முச்சக்கரவண்டியின் சாரதி காயமடைந்துள்ளார்.

வவுனியாவில் கடந்த சில தினங்களாக விபத்துக்கள் அதிகரித்து வருவதுடன் இதனால் மரணங்களும் சம்பவிக்கின்றன. (4-2)

# தேசிய பாடசாலையாக நெல்லியடி ம.ம.வித்தி.

(கரவெட்டி)

யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இன்று தேசிய பாடசாலையாக தரம் உயர்த்தப்படவுள்ளது என பாடசாலை அதிபர் எஸ்.சேதுராசா தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சினால் இப் பாடசாலை கண்காணிக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.வடமராட்சி கல்வி வலயத்தில் முதலாவது தேசிய பாடசாலையாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்து. (ச-9,24)

# தவறான தகவல்களை வழங்கும் இந்.மத்திய புலனாய்வுப் பணியகம்

இந்தியாவின் பிரதான புலனாய்வு அமைப்பான மத்திய புலனாய்வுப் பணியகமானது (சி.பி.ஐ.) இன்னமும் சரியானதொரு முடிபை எடுத்தது போல் தெரியவில்லை.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவின் மத்திய புலனாய்வு அமைப்பானது தனக்கு மிகவேண்டிய 50 பேரின் பெயர்ப் பட்டியலைத் தயாரிப்பதில் தவறிழைத்தன் பின்னர் தற்போது மீண்டும் மிகப்பெரிய தவறொன்றை இழைத்துள்ளது.

இந்தியாவின் முன்னாள் பிரதமரான ராஜீவ் காந்தியின் கொலை வழக்குத் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட வேளையில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த தனு என்றழைக்கப்படும் தேன்மொழி இராஜரட்ணத்திற்கு விசாரணை மன்றாலும் உச்ச நீதிமன்றாலும் மரண தண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டதாக இந்திய மத்திய புலனாய்வுப் பணியகம் தெரிவித்துள்ளது.

ஆனால் சென்னைக்கு அருகிலுள்ள சிறிபெரும்புத்தூரில் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட மே 21, 1991 அன்று தனுவும் கொல்லப்பட்டார் என்பதே உண்மையாகும்.

ராஜீவின் பாதங்களை வீழ்ந்து வணங்கிய வேளையில் தனு தான் அணிந்திருந்த குண்டுகள் பொருத்தப்பட்ட அங்கியை வெடிக்க வைத்தார். இக்குண்டுவெடிப்பின்போது ராஜீவ் காந்தி, தனுவுடன் மேலும் பலர் கொல்லப்பட்டனர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு எனப் பெயரிடப்பட்ட இணைப்பொன்றைத் தனது தளத்தில் இந்திய மத்திய புலனாய்வுப் பணியகமானது அண்மையில் இணைத்துள்ளது. இது சி.பி.ஐயின் ஆவணங்களின் ஒரு பகுதியாகும்.

சென்னையிலுள்ள தடா நீதிமன்றமானது ராஜீவ் கொலையுடன் தொடர்புபட்ட 26 பேருக்கு மரணதண்டனைக்கான தீர்ப்பை வழங்கியதாக அது தெரிவித்துள்ளது. ஆனால் உச்ச நீதிமன்றின் தீர்ப்பின் பிரகாரம் தனு மற்றும் ஏனைய மூன்று பேருக்கு மட்டுமே மரணதண்டனைக்கான தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் ஏனையவர்கள் பல்வேறு ஆயுள் தண்டனைத் தீர்ப்புகளுடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் இவ் விணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தவறான அறிவிப்புத் தொடர் பாக டி.என்.ஏ. செய்தி நிறுவனத்தால் அனுப்பப்பட்ட மின்னஞ்சலுக்கு இந்திய மத்திய பணியகத்தின் பேச்சாளர் எந்தவொரு பதிலையும் அளிக்கவில்லை.

இவ்வாண்டின் மே மாதத்தில் இந்திய மத்திய புலனாய்வுப் பணியகத்தால் வெளியிடப்பட்ட தவறான தகவல்கள் தொடர்பாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (எ-5)

# இராமாயண படக்காட்சி

(சாவகச்சேரி)

சரசாலை பொதுநூலகத்தில் எதிர்வரும் 8ஆம்,9 ஆம் திகதிகளில் இராமாயண தொடர் படக்காட்சி காலை 10 மணிக்கு நூலக மண்ட பத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் பார்த்து பயன் பெறுமாறு நூலகர் இ.தர்ம லிங்கம் அறிவித்துள்ளார். (4-3-29)

# கல்வியை பசும்மரத்தாணியாய் பதிய வைத்த வள்ளல்களே...

மண்ணுலகில் பவனி வரும் நடமாடும் தெய்வங்களே...!
எண்ணிலா ஏக்கங்களை சுமந்த மாணவனை கரையேற்றி-கல்வி
கண்ணைத் திறந்த பெரும் மனம் படைத்த வள்ளங்களே...!
ஓயாப்பணியே அழகென்று ஓடியாடிப் பணிபுரிந்து
தேயாத கல்வியை தேனாக காதினில் பாயவைத்து
வளமான வாழ்வு வாழ களம் அமைத்த பேரசான்களே...!
உளமாரப் பாராட்டி வாழ்த்தி தலைவணங்குகிறோம்...

அள்ள அள்ள வற்றாத ஜீவநதி...
கொடுக்கக் கொடுக்க குறையாத கல்வியை
கொடுத்துயர்ந்தவர்கள் நீங்கள்-உங்கள்
தாராள மனதாலே குவலயத்தில் பேரோடு வாழ்கின்ற
பெரியோர்கள் ஏராளம்...ஏராளம்...

சொல்லாமல் சொல்லி மாணவர் நெஞ்சினிலே
கல்வியை பசும்மரத்தாணியாயப் பதியவைத்த பெருந்தகைகளே!...
எழுத்தறிவித்தவன் இறைவன் என்ற...
அழுத்தமான ஔவையின் வார்த்தைக்கு உயிரூட்டியவர்களே...!
தேர்மீது உமைவைத்து தெருவெல்லாம் இழுத்தாலும்
பார்மீது நீவீர் செய்த பெரும் பணிக்கீடாமோ...

வ.ச.செல்வராசா

# சத்திய தரிசனம்



## அன்பிருக்கும் இடத்தில் ஆனந்தம்

✷ ஆரோக்கியமான பிள்ளைக்கு அவன் விரும்புவதையும், நோயாளி பிள்ளைக்கு கசப்பு மருந்தையும் தான், தாய் கொடுப்பாள்.

✷ நோயாளிப்பிள்ளை சீக்கிரம் குணமடைய வேண்டும் என்பதால் தான் கசப்பு மருந்தினைக் கொடுக்கிறாளே தவிர பாசக்குறைவால் அல்ல. அதுபோலவே கடவுளும் நம் நன்மைக்காகவே துன்பங்களைக் தந்து பக்குவப்படுத்துகிறார்.

✷ பெண்களை மிகவும் பலவீனமானவர்கள் என்று தவறாக எண்ணுகிறோம். ஆனால் உண்மையோ இதற்கு நேர்மாறாக இருக்கிறது. பெண்களே ஆண்களைவிட மனவுறுதி உள்ளவர்களாகவும் சக்தி நிறைந்தவர்களாகவும் இருக்கிறார்கள்.

✷ எதிர்பார்ப்பு இல்லாத அன்பே முழுமையானதாகும். அப்படிப்பட்ட அன்பு உள்ள இடத்தில் ஆனந்தம் பிறக்கும்.உண்மை,தியாகம், அமைதி முதலிய நல்ல பண்புகளும் அன்பு இருக்குமிடத்தில் குடிகொள்ளும்.

✷ உலகில் உள்ள பற்றுக்களை விலக்காவிட்டால் கடவுளின் அன்பைப் பெற முடியாது. உலகப்பற்றுக்களில் நாம் பிணைக்கப்பட்டிருக்கும் வரை கடவுளிடம் இரண்டறக் கலத்தல் என்பது இயலாத ஒன்றாகும்.

# சர்வதேச சிறுவர், முதியோர் மாற்றுவலுவுள்ளோர் தினம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றுவலுவுள்ளோர் தினம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்காலாசாலை அதிபர் வே. கா. கணபதிப்பிள்ளை , யாழ்ப்பாண மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஆ.ஞானவேல், யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன், கௌரவ விருந் தினர்களாக கோப்பாய் லயன்ஸ் கழக தலைவர் லயன் இ. பாலசுந்தரம், அச்சுவேலி வட்டம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ந.ரகுலகரன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகவில் சிறுவர், முதியோர், மாற்றுவலுவுள்ளோர் கௌரவிப்பும், கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (4-12)

* * * * *

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய்,மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் முதியோர் மற்றும் சிறுவர் தின விழா எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட முதியோர் மற்றும் சிறுவர்களுக்கான விழா பாண்டியன்குள மகா வித்தியாலயத்தில் பி.ப 1 மணிக்கும் துணுக்காய் பிரதேச செயலகப்பிரிவுக்கு உட்பட்ட முதியோர் மற்றும் சிறுவர்களுக்கான விழா துணுக்காய் பிரதேச செய லகத்தில் பி.ப 4 மணிக்கும் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் 80 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. (4-3)

# நாட்டு மக்களுக்கு தற்போது பாதுகாப்பு பிரச்சினை இல்லை

## கோத்தபாய தெரிவிப்பு



நாட்டில் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் மக்களுக்கு பாதுகாப்பு பிரச்சினைகள் இருக்க முடியாது.

மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு தேவையான சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. பிரச்சினைகள் ஏதேனும் காணப்பட்டால் அது தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறு கோரியுள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டங்களை நடத்திய காரணத்தினால் கடந்த சில ஆண்டுகளாக பொலிஸார் சிவில் கடமைகளை உரிய முறையில் மேற்கொள்ளவில்லை.

தங்க ஆபரண உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (4-2)

# புலிச் சந்தேக நபர்கள் நால்வருக்கு வழக்கு முடியும் வரை விளக்கமறியல்

## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

இலங்கையில் வடக்கு, கிழக்கு யுத்தம் முடிந்த பின்னர் வவுனியா அகதிகள் முகாமில் மறைந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்ட நான்கு பிரதான புலிச் சந்தேச நபர்கள் மீதான வழக்கு முடியும் வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரச புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குற்றத் தடுப்புப் பிரிவினரால் குறித்த நான்கு புலிச் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் மீது தீவிரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டியுள்ளதென நீதிமன்றிற்கு அறிக்கை சமர்ப்பித்து பொலிஸார் கூறியுள்ளனர். புலிகள் இயக்கத்தில் ஆயுதப் பயிற்சி பெற்று பல தாக்குதல்களை இவர்கள் புரிந்திருப்பதாக தகவல் கிடைத்துள்ளதென பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களுக்கு எதிராக மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளதாக பொலிஸார் அறிவித்ததை ஏற்றுக் கொண்ட கொழும்பு நீதிவான் நீதிமன்றம் சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (4-2)

# அபிவிருத்தியை அடிப்படையாக கொண்டே செயற்பட்டு வருகிறேன்

## பிரபா கணேசன் தெரிவிப்பு



அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து எமது மக்களின் நலனுக்காகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேனே ஒழிய பேரினவாதத்திற்கு துணை போனதில்லை. குறிப்பாக அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் ஒருபோதும் வாக்களித்ததில்லை என பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்தார்.

வெள்ளவத்தை கெலிங்வூட் பாதையிலுள்ள தொடர்மாடி உரிமையாளர்கள் மத்தியில் உரையாற்றும் பொழுது அவர் மேலும் தெரிவித்தாவது,

நான் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து வருவதனால் பேரினவாதத்திற்கு துணை போவதாக ஒரு சிலர் விமர்சனம் செய்கிறார்கள். நான் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினரோ அல்லது ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உறுப்பினரோ அல்ல.

அரசாங்கத்தின் மூலமாக எமது மக்களுக்கு கிடைக்க வேண்டிய அபிவிருத்திகளை அடிப்படையாகக் கொண்டே செயற்பட்டு வருகின்றேன். கொழும்பு மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளை முழுமையான முறையில் அபிவிருத்தி செய்வதே எனது இலக்காகும். அதேபோல் தமிழ் மக்களுக்கு ஏதாவது அநீதி இழைக்கப்படுமானால் அவர்களுக்காக குரல் கொடுக்க ஒரு போதும் தயங்கியதில்லை என்றார். (4-2)

# தேர்தல் காலங்களில் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம்

## தேர்தல் செயலகம் ஒப்புக்கொண்டது

(கொழும்பு)

தேர்தல் பிரசாரங்களின் போது அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதனைத் தடுக்க முடியாது என தேர்தல் திணைக்களம் ஒப்புக்கொண்டுள்ளது.

அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் நடவடிக்கை எடுக்கும்அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு கிடையாது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியினர் அரசாங்க ஊடகங்களை பயன்படுத்தி தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 18 ஆம்திருத்த சட்ட மூலத்திற்கு அமைய ஊடகப் பயன்பாடு குறித்து கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு கிடையாது என பிரதி தேர்தல் ஆணையாளர் எம்.எம். மு ஹமட் தெரிவித்துள்ளார்.

எனவேபக்கசார்பற்றநடுநிலையான ஊடகப் பயன்பாட்டினை உறுதி செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். சுயாதீனமான முறையில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள அரச மற்றும் தனியார் ஊடகங்கள் ஆவன செய்ய வேண்டுமென தேர்தல் ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை நடைபெறவுள்ள உள்ளராட்சி மன்ற தேர்தல் நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக ஆறு இந்திய அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம்செய்துள்ளனர்.

இந்திய தேர்தல் திணைக்களத்தில் கடமையாற்றி வரும் அதிகாரிகளே இவ்வாறு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். தேர்தல் நடைபெறும் எதிர்வரும் 8 ஆம் திகதி குறித்த அதிகாரிகள் அவதானிப்புக்களை மேற் கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. (2)




ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

# தரம்–5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றமைக்காக ஸ்ரீ அம்மா பகவானைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா
புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத
ஸ்ரீ பகவதே நமஹ

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தினராகிய நாம் ஸ்ரீ அம்மா பகவானின் வித்தியாமாலை அணிவிக்கப்பட்ட மாணவர்களுள் 2011 ஆண்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு மாணவர்களின் முயற்சிக்கு ஊக்கம் அளித்த பெற்றோர்களையும் பேராதரவு நல்கிய அதிபர்கள், ஆசிரியர்களையும் பாடசாலைகள் சென்று வித்தியாமாலை அணிவிக்க அனுமதி அளித்த வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு. ப.விக்கினேஸ்வரன் ஆகியோருக்கும் எங்களின் நன்றிகளைத் தெரிவித்து எல்லோருக்கும் ஸ்ரீ அம்மா பகவான் இன்றைய விஜயதசமி நன்னாளில் ஆரோக்கியம், ஐஸ்வரியம், சக்தி, செல்வம், கல்விஞானம், வேண்டிய வரங்களை எல்லாம் அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

**சித்திபெற்ற மாணவர்கள் விபரம்**

| மாணவர் பெயர் | பாடசாலை | பெற்ற புள்ளிகள் | நோக்கம் வேண்டுதல் |
|---|---|---|---|
| 1. சு.விதுர்ஷன் | யா/ஊரி அ.மி.த.க பாடசாலை | 181 (தீவகவலயத்தில் 1ஆம் இடம்) | பொறியியலாளராக வருதல் |
| 2.கி.சிந்துயன் | யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை, காரைநகர் | 161 | புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைதல் |
| 3. இ.நிவேதா | யா/பண்டத்தரிப்பு உயர்தர மகளிர் கல்லூரி | 161 | புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைதல் |
| 4.பா. கேதுசா | யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை | 159 | ஆசிரியராக வருதல் |
| 5. ஜெ.விதுர்சனா | யா/வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை | 158 | பொறியியலாளராக வருதல் |
| 6. அ.ரம்யா | யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் | 157 | வைத்தியராக வருதல் |
| 7. அ. பிரணவரூபன் | யா/களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் | 155 | வைத்தியராக வருதல் |

குறிப்பு:- மேற்படி சித்திபெற்ற மாணவர்களும் 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களும் தங்கள் பெற்றோர்களுடன் எதிர்வரும் சனிக்கிழமை 08.10.2011 அன்று பி.ப 2.30 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் ஸ்ரீ அம்மா பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து மேலும் சித்திகள் பெற்று வேண்டுதல்களை நிறைவேற்றிக்[illegible]ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுழிபுரம், ஸ்ரீ அம்மாபகவான் சத்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையம், யாழ். மாவட்டம்.
தொலைபேசி :-0777 651719

# அரையிறுதியில் சோமர்சட் வெளியேறியது வாரியர்ஸ்

கீஸ்வேற்றரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் சோமர்சட் அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வாரியர்ஸ் அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று பெங்களூரில் நடைபெற்ற போட்டியில் பிரிவைச் சேர்ந்த இங்கிலாந்தின் சோமர்சட் அணியும் தென்னாபிரிக்காவின் வாரியர்ஸ் அணியும் மோதின. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சோமர்சட் அணி கீஸ்வேற்றரின் சிறப்பான அரைச்சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களையிழந்து 146 ஓட்டங்களை எடுத்தது.



வான்டேர் மேர்வி

இதில் கீஸ்வேற்றர் ஆட்டமிழக்காமல் 52 பந்துகளில் (4 பவுண் டரிகள், 3 சிக்ஸ்சர்கள் உட்பட) 56 ஓட்டங்களையும் வான்டேர் மேர்வி 16 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட )32 ஓட்டங்களையும் பட்லர் 30, ஹில்ட்ரத் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரிசொற்சோபே, சிமட்ஸ், போத்தா, திரோன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 147 ஓட்டங்கள் என்றவெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய வாரியர்ஸ் அணிக்கு ஆரம்பத்தில் பிறின்ஸ் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும் பின்னர் இணைந்த சிமட்ஸ், இங்ராம் சிறப்பான ஆட்டத்தை வழங்கினர்.

எனினும் மத்திய வரிசை வீரர்கள் சோபிக்காத நிலையில் வாரியர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 134 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இதன் மூலம் சோமர்செட் அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று 5 புள்ளிகளுடன் அரையிறுதிக்கு முன்னேறியது.

துடுப்பாட்டத்தில் சிமட்ஸ் 39 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 38 ஓட்டங்களையும், இங்ராம் 25 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2 சிக்ஸ்சர்கள் உட்பட) 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித் தலைவர் தோமஸ் கேர்பி, கார்த்திக் தலா 2 விக்கெட்டுக்களையும் டிப்பில், வான்டேர் மெர்வி தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர். இப்போட்டியில் தோல்வியடைந்த வாரியர்ஸ் அணி அரையிறுதி வாய்ப்பை இழந்து வெளியேறியது.

# சர்வதேச வர்த்தக கண்காட்சியில் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பங்கேற்பு

மட்டக்களப்பு நகரமானது கிழக்கிலங்கையின் மத்திய நகரமாக அமைந்துள்ளதுடன் வர்த்தகம் மற்றும் விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளின் மையப் பிரதேசமாகவும் விளங்குகிறது.

மட்டக்களப்பையும் அதைச் சூழ்ந்துள்ள பகுதியையும் வெளிச்சத்துக்கு கொண்டுவரும் வகையில் மட்டக்களப்பு சர்வதேச வர்த்தக கண்காட்சி -2011 வடிவமைக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிபுற்றுள்ள இந்தக் காலப் பகுதியில் மட்டக்களப்பு போன்ற முன்னர் ஆபத்து நிறைந்திருந்த பிரதேசங்கள் அபிவிருத்திக்குட்படவும் அடையாளம் காணப்படவும் வேண்டிய முக்கியத்துவம் பெறுகின்றன.

அதற்கிணங்க உட்கட்டமைப்பும் ஏனைய வசதிகளும் வேக வேகமாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், அங்கு முதலீட்டுக்கும் வளர்ச்சிக்குமான வாசலைத் திறக்கும் முயற்சியில் முதலாவதாக அமையவுள்ளது.

300க்கும் அதிகமான கடைத் தொகுதிகளுடன் 2011-ம் ஆண்டு ஆண்டு ஐப்பசி 7-ம் திகதி ஆரம்பமாகவுள்ள குறித்த கண்காட்சி 3 நாட்கள் தொடர்ச்சியாக நடை பெற்று ஏராளமான உற்பத்தி மற்றும் சேவைகள் குறித்த விபரங்கள் காட்சிப்படுத்தப்படும்.

அந்த வகையில் வங்கிகளுக்கான தொகுதியில் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பலப்பல கவர்ச்சி மிக்க, பணலாபம் தரக்கூடிய வாய்ப்புகளுடன் இணையவுள்ளது.

இதுகுறித்து வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரி சாலிய ராஜகருண கூறியதாவது,

மட்டக்களப்பு பிரதேசமானது மிகவும் பெறுமதி வாய்ந்தது. வரலாற்றை எடுத்து நோக்குவோமாயின் மட்டக்களப்பு நகரமானது வர்த்தகத்தில் ஒரு துறைபோனதும், இயக்கம் மிக்கதுமான மையமாக அமைந்துள்ளது.

நாம் மட்டக்களப்பு மக்களுக்கு எங்களால் முடிந்த அளவிற்கு சிறப்பான நிதித்தீர்வுகளை வழங்கவுள்ளோம். அதற்கு அமைவாக அப்பிரதேசத்தைச் சேர்ந்த தனி நபர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் பயன்தரக்கூடிய பலப்பல வாய்ப்புகளை எமது உற்பத்தி மற்றும் சேவைகளின் தொகுப்பாக வடிவமைத்துள்ளோம்.

கண்காட்சியில் அமையவுள்ள எமது தொகுதியானது சேமிப்பு, முதலீடு, அடகு, கடன் குத்தகை மற்றும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டை உறுப்புரிமை போன்ற பல நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் முக்கிய உற்பத்தி மற்றும் சேவைகளைக் காட்சிப்படுத்தும்.

கடன்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்கதாவது, சம்பளம் பெறுபவர்களும், பொறியியலாளர், வைத்தியர், கணக்காளர் போன்ற தொழில்நுட்ப வல்லுநர்களுக்கும் ஏற்பான வட்டி அடிப்படையில் வீட்டுக் கடன்கள் மற்றும் தனிநபர் கடன்கள் வழங்கப்படும். தனிநபர் கடன்கள் 3.5 மில்லியன் ரூபாய்கள் வரையும் வழங்கப்படவுள்ளதுடன் நீடிக்கப்பட்ட தவணைமுறை அடிப்படையில் திருப்பிச் செலுத்தும் வசதியும் அங்கு உண்டு.

அவ்வாறே வீட்டுக் கடன்களுக்கு வருடாந்த வட்டிவீதம் வெறும் 11.5 சதவீதமேயாகும்.

அத்துடன் அன்றைய தினம் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கடன் அட்டைக்கு விண்ணப்பிப்பவர்களுக்கும் பல ஆச்சரியமான பரிசுகள் காத்துள்ளன.

இலட்சத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்களை எதிர்பார்க்கும் கண்காட்சி அதன் மூலம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதுடன் அப்பிரதேச மக்களின் பொருளாதார மற்றும் தொழிற்துறைச் செயற்றிறன்களை உலகிற்கு வெளிப்படுத்தவும் உள்ளது.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியானது மட்டக்களப்பு வாழ் மக்களுடன் எப்போதும் துணையாக நிற்க உறுதி பூண்டுள்ளதோடு மட்டுமல்லாமல் மீள் அபிவிருத்தியின் போது அவர்களுக்கோர் வலுமிக்க தூணாகவும் அமையவுள்ளது.(ச-5)

## நவராத்திரி விழா

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தின் நலன்புரிக் கழகமும் நிர்வாகப் பிரிவும் இணைந்து நடத்தும் நவராத்திரி விழா இன்று காலை 9.30 மணிக்கு நிர்வாக உத்தியோகத்தர் ந.பாலசுப்பிரமணியம் தலைமையில் யாழ்.வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில்நடைபெறும்.

இவ்விழாவில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.(நு)

## கொழும்பை...

வேலைத்திட்டங்களை கொலன்னாவ நகரத்திற்கும் கொண்டு வரப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொலனாவ தேர்தல் தொகுதிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த பாதுகாப்புச் செயலாளர்அங்குஇடம் பெற்ற மக்கள் சந்திபொன்றின் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

கொலனாவ நகர சபையின் அதிகாரத்தை அரசாங்கம் கொண்டிருக்குமானால் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் மேலும் இலகுவான முறையில் முன்னெடுத்துச் செல்லக்கூடியதாக இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-5)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்
**திருமதி திவ்வியா சதீஸ்குமார்**
அவர்கள் இன்று (06.10.2011)
யாழ். பல்கலைக்கழகத்தில்
நடைபெறுகின்ற பட்டமளிப்பு
விழாவில் பண்பாட்டியல்
முதுகலைமாணி (M.A) பட்டத்தினை
பெறுவதையிட்டு வாழ்த்தி,
மகிழ்ச்சியடைகின்றோம்.
(6328)

யா/ இடைக்காடு ம.வி, அச்சுவேலி — அதிபர், ஆசிரியர்கள்

## வாழ்த்துகின்றோம்

நல்லூர்க் கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் நீடூழி காலம் வாழ்கவென இன்றைய உலக ஆசிரியர் தின நன் நாளில் வாழ்த்துவதில் உவகையடைகிறோம்.

நல்லூர் கல்விக் கோட்டம்

எஸ்.மாணிக்கராசா
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
மற்றும் ஊழியர்கள்
(சி-4646)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சண்டிலிப்பாய் வீரபத்திரர்
கோவிலடியைச் சேர்ந்த
**பா. றெபின்சன்**
யா/ சண்டிலிப்பாய் இந்துக்
கல்லூரியில் கல்வி கற்று தரம் 5
புலமைப் பரிசில் பரீட்சையில் 172
புள்ளிகளைப் பெற்று சித்தி
அடைந்ததை பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

**பாஸ்கரன் றெபின்சன் – 172புள்ளிகள்**

வாழ்த்துவோர்
அப்பம்மா, பெரியப்பா, சித்தப்பா குடும்பம்
செ‌ன். செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு [சாமி]
(6324)

**‘ஆசிரியர் பிரதீபா பிரபா விருது -2011’ இல் விருதுபெறும் எமது பாடசாலை அதிபர், ஆசிரியை இருவருக்குமான பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்**



இன்று நடைபெறும் மேற்படி விருது வழங்கும் நிகழ்வில் வடமராட்சி வலயத்தில் எமது பாடசாலையிலிருந்து தேர்வு செய்யப்பட்டு சிறந்த அதிபருக்கான விருதினைப் பெறும் அதிபர் **திரு.செ.சேதுராஜா** அவர்களையும் சிறந்த ஆசிரியருக்கான விருதினைப் பெறும் **திருமதி ரஞ்சினி சிவராஜா** அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.



பணியாளர் பேரவை
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
(சி-4643)

உல்லாசம்
உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL

TILKO hotels
No.70/6, K.K.S
Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில்
இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134


# பாலியல் குற்றங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனை

## வழங்குவதற்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

பெண்கள், குழந்தைகளைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த வழக்குகளில் ஒத்திவைக்கப்பட்ட தண்டனைகள் வழங்கப்படுவதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் வழக்குத் தொடர்பான அடுத்த கட்ட விசாரணை டிசெம்பர் 8ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் குழாமில் பிரதம நீதியரசர் சிரானி பண்டாரநாயக்க, நீதிபதிகளான பீ.ஏ.ரட்னாயக்க, சத்யா ஹெட்டிகே ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். சட்டத்தரணியும் மனிதவுரிமைகள் மற்றும் அபிவிருத்திகளுக்கான வழக்குரைஞர்களின் பெண்கள், குழந்தைகள் பிரிவின் இணைப்பாளருமான ஹஸந்தி ரத்னாயக்க இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

சட்டமா அதிபர், ஜனாதிபதியின் சட்டத்தரணி லலித் வீரதுங்க, நீதிய மைச்சின் செயலாளர் சுஹத கம்லத், சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர், பொலிஸ்திணைக்களத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் பணிப்பாளர், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் ஆகியோர் இம்மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பெண்கள், குழந்தைகளை பாலியல் துஷ்பிரயோகம் செய்த வழக்குகளில் ஒத்திவைக்கப்பட்ட தண்டனைகளை வழங்கும் போக்கினால் மிக மோசமாக பாதிக்கப்படக்கூடிய பெண்கள் மற்றும் சிறுவர்கள் சார்பில் பொதுநல வழக்காக இதனை மனுதாரர் தாக்கல் செய்துள்ளார். (எ-5)

## ஆணைக் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முழு வடிவம் பெற்ற பூரண அறிக்கை அடுத்த மாதம் 15ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளதென பி.ரி.ஐ. செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவானது கடந்த வருடம் மே மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டிருந்தது. அத்துடன் பாதிக்கப்பட்ட பல்வேறு தரப்பினரிடமும் வாக்குமூலங்களைப்பதிவுசெய்திருந்தமை தெரிந்ததே. (எ-5)

## ஆயிரத்து 800 பேரில்...

பெற்றோரிடம் கையளிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு விடுதலை செய்யப்படுபவர்களுக்கு வழங்கப்படும் விசேட அடையாள அட்டை, மருத்துவச்சான்றிதழ்கள்மற்றும்ஆவணங்கள் அன்றையதினம் தயார்ப்படுத்தப்படவில்லை என்ற காரணத்தினால் ஜனாதிபதியினால் அடையாளமாக விடுவிக்கப்பட்ட 30 போராளிகளும்கூட வீடு செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இவ்வாறு விடுதலை செய்யப்படுபவர்களுக்கான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு இப்போராளிகள் அனைவரும் கடந்த திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் புனர்வாழ்வு நிலையங்களில் வைத்து விடுதலை செய்யப்படுவார்கள் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

ஆயினும் வவுனியா தமிழ்மத்திய மகா வித்தியாலயப் புனர்வாழ்வு நிலையத்திற்குக் கடந்த 03ஆம் திகதி காலை அழைத்துச் செல்லப்பட்ட 755 போராளிகளே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் ஏற்கெனவே அறிவித்தவாறு எவரும் விடுதலை செய்யப் படவில்லை. மிகுதியாக விடுதலை செய்யப்படவுள்ளவர்களுக்கான அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள் தயாரிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாகவே நேற்று எவரும் விடுதலை செய்யப் படவில்லை எனக் கூறப்பட்டுள்ளது. (ச-5)

## ஜப்பானில்...

வெளிப்பாடுகள் எதுவும் ஏற்படவில்லையென அணுஉலைமையத்தின் பேச்சாளர் யூகிஹிரானோ தெரிவித்துள்ளார்.

அணுஉலையில் நீர்வெளியேற்றி நிறுத்தப்பட்டதுடன் அலாரம் எழுப்பப்பட்டு பின்னர் முழுக்கட்டமைப்பும் செயலிழந்ததாக அவர் குறிப்பிட்டார். (ச-5)

## அமெரிக்காவில் சிகி...

சட்ரீதியான நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கு அமெரிக்க அரசாங்கத்துக்கு அதிகாரம் இல்லை எனவும் அவர் பீரிஸிடம் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் குயின்ஸ்லாந்து பௌத்தவிகாரையில் இடம் பெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடம் நீதிமன்ற அழைப்பாணையை கையளிக்க அமெரிக்க அதிகாரிகள் காத்திருப்பதாக தெரியவந்ததைத் தொடர்ந்து அவரால் அங்கு செல்லமுடியவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

கேணல் ரமேஷின் படுகொலை, வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு காரணமாக இருந்தவர் என்ற அடிப்படையிலேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை படைத்தரப்பினரிடம் சரணடைந்த பின்னர் படுகொலை செய்யப்பட்ட கேணல்ரமேஷின்துணைவிவத்சலா தேவியின் சார்பில் இவ்வழக்கு கடந்தமாதம் 22ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## இனப்பிரச்சினைக்கான அரசி...

நாட்டின் எதிர்கால நலன் குறித்த ஏனைய முக்கிய பிரச்சினைகளானவை தேசியப்பிரச்சிகைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுகாணுவதுடன் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளன.

தேசியப்பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை உருவாக்கும் முகமாக அரசாங்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றது.

தமிழ்மக்கள் நாடாளுமன்றத் தேர்தலிலும் உள்ளூராட்சித் தேர்தலிலும் வடக்குக் கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பலமான ஆதரவை நல்கியதுடன் தங்கள் சார்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்றை பேச்சுவார்த்தை மூலம் காணுபடி தெளிவான ஜனநாயக ஆணையையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியும் உள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப் பணியை செய்து முடிக்க திடசங்கற்பம் பூண்டுள்ளது. இப் பணியை செய்து முடிப்பதற்கான பலத்தை தமிழ் வாக்காளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மீண்டும் உறுதிப்படுத்தி வெளிக்காட்டுவது கட்டாயமானதாகும்.

வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ள கூடியதானதும் நியாயமானதும் நேர்மையானதுமான தீர்வு ஒன்றைக் காணுவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம்.

முஸ்லிம் சகோதரர்களின் அக்கறைகள் குறித்து நாம் குறிப்பாக கரிசனை கொண்டுள்ளோம். காணப்படவுள்ள அரசியல் தீர்வானது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதைப் போன்று முஸ்லிம் மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைவதை உறுதி செய்வதே எமது முயற்சியாக இருக்கும்.

சிங்கள சகோதரர்களின் நியாயமான உரிமைகளுக்கு குந்தகம் விளைவிப்பதாக அமையாது வடக்குக் கிழக்கில் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற தமிழ் பேசும் மக்களின் பொதுவான அக்கறைகளான எமது தனித்துவம், எமது பாதுகாப்பு, எமது பிரதேச வளங்கள் மற்றும் எமது பொருளாதார, சமூக, கலாசார நலன்களை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற இலக்குகளை அடைவதற்கு நாம்-தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

இந்த உண்மை ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படும் நாள் விரைவில் வந்தேயாகும். எதிர்வரும் கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வலுவானஆதரவைவழங்க வேண்டும்என்றுமக்களைநாம் வேண்டு கின்றோம் என்றுள்ளது. (ச-5)

அனைத்துலக ஆசிரிய நாளில்
நினைந்தும்மை வாழ்த்துகிறாள்....
மங்கையர்க்கரசி

2011 தரம் ஐந்து மாணவர்களில் தனிச்சிரத்தை கொண்டு
கல்வித்தர மேம்பாட்டை உறுதி செய்த ஆசிரியை
திருமதி கலாநிதி நிக்ஸன்
அவர்கள் வேண்டும் வரம் பெற இந்நாளில் வாழ்த்துகிறோம்
159 புள்ளிகளைப் பெற்று சித்திகண்ட
த.நிதுர்சன் ஐயும்
149 புள்ளிகள் பெற்று வெற்றிப் புள்ளியை அண்மித்த
ம. சுதர்சினி ஐயும்
100 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்ற எண்மரையும் பாராட்டுவதுடன்
அனைவரும் முதனிலை, இடைநிலை, உயர்நிலைக் கல்வியை
ஆர்வமாய்த் தொடரவும் துணைசெய் ஆசிரியர்களனைவரும்
வாண்மையால் வாய்மை வெற்றி கண்டு வாழவும் வாழ்த்துகிறோம்
2011.10.06 நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
(சு-4645)

DCM யாழ் நகர்
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
கணக்கீடு
AP. பகீரதன் B.B.A(Fm Spl.)
A/L 2013 Fri 3-5
கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம்பம் 07.10.2011 Fri
A/L 2012 PAPER CLASS
நேர அட்டவணை அலுவலகத்தில்
(6327)

புதியதோர் உலகம் செய்வோம்
DCM 1ம் குறுக்குத் தெரு, யாழ்நகர்
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
A/L 2012, 2013 கலைப் பிரிவு
புதிய பிரிவுகள் மற்றும் மீட்டல் வினாவிடை வகுப்புகள்

| | |
|---|---|
| பொருளியல் | வரதராஜன் |
| தமிழ் | சந்திரலிங்கம் |
| புவியியல் | குமரன் |
| அரசியல் | சுகாஷ் |
| வரலாறு | ஆனந்தன் |
| இந்துநாகரீகம் | ஸ்ரீஸ் |
| அளவையியல் | துரை |
| நாட. அரங்கியலும் | ரமேஷ் |

ஆரம்பம் - 8 - 10 - 2011 சனி
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்

புலமைக் கல்வி நிறுவனம்
மானிப்பாய்
தரம் 5, தரம் 4 மாணவர்களுக்கான
புலமைப் பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்
ஆசிரியர் திரு.க. கலாமோகன் (BA. Dip. in Tech)
காலம்: 06.10.2011 (விஜயதசமி இன்று)
தரம் 5 (தற்போது தரம் 4) - பிரிவு II பி.ப. 4.30
தரம் 4 (தற்போது தரம் 3) - பிரிவு I பி.ப. 3.00
புலமைக் கல்வி நிறுவனம்
இணுவில் வீதி, மானிப்பாய்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக
மற்றும் நுழைவு மாணவர்களுக்கான
இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
05.10.2011 காலை 11-1 மற்றும் 06.10.2011 காலை 11-1
கதைத்தலுக்கு தேவையான ஆங்கிலம் முழுமையாக கற்பிக்கப்படும்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.